"டி அரசு" பதிப்பக வெளியீடு 24.

பாரத ஆராய்ச்சி.

———)o(———

ஆதிபருவம்.

———

நாகையன்

என்பவரால் ஆராயப்பட்டது.

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

ஈரோடு

"குடி அரசு" பதிப்பகத்தாரால்

வெளியிடப்பட்டது.

1935.

———

விலை அணா 0—4—0.

உண்மை விளக்கம் பிரஸ்,

ஈரோடு.

மகாபாரதம்.

ஆதி பர்வம் ஆராய்ச்சி.

வேத வியாசரின் பிறப்பு.

———)*(———

கடல் சூழ்ந்த நெடிய உலகத்தில் சகல வளமும் பெற்று விளங்குகிற நாடெவற்றினும் சேதி நாடு மிகவும் சிறப்புற்றது. அந்நாட்டில் செங்கோல் நடாத்துபவன் வசு ராஜன் என்பான். ஒரு நாள் காட்டிற் சென்று பரிவாரங்களோடு வேட்டையாடிய பின்பு, முனிவர்கள் தவஞ் செய்கிற பெரிய சோலைக்கு வந்தான். அம்முனிவர்களைக் கண்ணுற்றதும் தவத்தின்மேலிச்சை கொண்டு, தன்து மந்திரியிடம் ஒழுங்காய் அரசாட்சி செய்து வரும்படியாக ஆக்ஞாபித்து, அவர்களை அனுப்பிவிட்டு, வசு ராஜன் அநேக நாள் தவஞ் செய்திருந்தான்.

வசு ராஜன் தபசு.

இந்திரன் வசு ராஜனுக்கு முன் தோன்றி நீ தவஞ் செய்து வருகிற காரணமென்னவென்று வினவ, வசு ராஜன் நமஸ்காரஞ் செய்து தவத்துக்கு மிஞ்சின பொருள் வேறொன்றுமில்லை என்று நினைத்து சஞ்சலத்துக்கிடமாகிய உலகத்தை நீக்கித்தவநிலை சேர்ந்தேனென்றான். அமரருக்கதிபதியாகிய இந்திரன், அவனை மெச்சி, தவத்

துக்கு மேலான பொருள் ஒன்றுமில்லை; அத்தவம் அரசனால் பெருகவேண்டும், அப்போது தவத்துக்கு மிகவும் உயர்ந்தது அரசு; அவ்வரசை மனுநீதி தவறாமல் செலுத்திவந்தால் அதைவிட மேலான பயனொன்றுமில்லை. ஆதலால் நீ உன் நகரஞ்சென்று அரசு செலுத்துவாயாக. உனக்கு வேண்டிய வரத்தைக் கேளென்று வினவ, வசு ராஜன் எந்தெந்த உலகங்களைக்காண விரும்புகிறேனோ அந்தந்த உலகங்களைக் காண அனுக்கிரகஞ்செய்யவேணுமென்று வேண்ட, இந்திரன் அரசன் கருத்துப்படி ஒரு விமானங்கொடுத்து, சத்துருவை நாசஞ்செய்ய ஒரு கால தண்டமும், கமல மாலையும், சொர்ணசிறமும் கொடுத்துப் போக வசு ராஜன் அதைப் பெற்றுக்கொண்டு, தன் நாட்டையடைந்து முன்போல மனுநீதி வழுவாது ராச்சிய பரிபாலனம் செய்து, தன் கருத்தில் நினைத்த உலகங்களுக்கெல்லாம் சென்று, அவ்விடத்தின் அதிசயங்களைப் பார்வையிட்டுக்கொண்டு வரலாயினன். ஒரு நாள் வசு ராஜன் மந்திரி முதலானவர்கள் புடைசூழ, சுத்தமதியென்னும் நதியருகில் வந்து, அவ்விடத்திலிருக்கிற விநோதங்களைக் கண்டு வரும்பொழுது, அவ்வரசன் தனது பராக்கிரமத்தைக் காட்ட நினைத்து, அந் நதியருகில் உயர்ந்து பருத்திருக்கிற கோலாகலமென்கிற வெற்பைத் தன் காலினாலேற்றி அந் நதியிற்றள்ளினன். சுத்தமதி என்கிற நதி போகத்தை அனுபவிக்கக் கருதி, ஒரு பெண்ணுருவங்கொண்டு, கோலாகலமென்கிற வெற்பைக் கணவனாகச் செய்து கூடி வசுபத்தனென்ற ஒரு புத்திரனையும், கிரிகை என்ற ஒரு புத்திரியையும் பெற்றாள். சுத்தமதியென்கிற நதி அவ்விருவரையும் பாதுகாத்து வந்தாள். கிரிகை என்பவள் மந்

கைப் பருவமடைந்த காலத்தில் ஒருநாள் நதியருகில் விளையாடிக்கொண்டிருந்தாள்.

நதி பெற்ற புத்திரிமீது காதல்.

அது சமயம் வசுராஜன் முன்போலவே வேடிக்கையார்த்தமாய் வந்தான். அவ்வமயம் அன்னவளைக்கண்டு காதலுற்றான். அக்கருத்தையறிந்த மந்திரி அம்மங்கையை யாரென்று விசாரிக்க அவள் தான் சுத்தமதி என்னும் நதியினுடைய புத்திரி என்றும், தன் பெயர் கிரிகை என்றும் சொல்லி மறைந்தாள். அவ்வசுராஜன் அவைகளைக் கேட்டு அந்நதியை வணங்கி கிரிகையைத் தரவேண்டினான். அவள் மேற்கூறியபடி மக்களையடைந்த விதத்தைச் செப்பி, கிரிகையை மணஞ் செய்துகொள்ளவும், வசுபதத்தனை சேனாதிபதியாக வைத்துக்கொள்ளவும் புகன்று தனது மக்களை ஒப்படைத்து மறைந்தாள். வசுராஜன் கிரிகையைக் கலியாணஞ் செய்து சுகமனுபவித்து வருகிற நாளில், கிரிகை கற்பவதியானாள். ஒருநாள் வசுராஜன் தன் மனைவிக்கு நல்ல மாமிசங்களைக் கொண்டு வந்து கொடுக்கக் கருதி, மந்திரி பிரதானிகள் சகிதம் காட்டிற்குச் சென்று வேட்டையாடிய பின்பு, ஒரு அழகிய சோலையிலிறங்கி வஸ்திரங்களினால் மாளிகை இயற்றி, அதில் வசுராஜன் இரவில் சயனித்துக் கொண்டான்.

கனவில் வீரிய ஸ்கலிதம்.

அவ்வாறு துயிலும்போது கிரிகையோடு கூடிக்கலந்தாற்போல் கனவு கண்டு வீரியம் ஸ்கலிதமாயிற்று உடனே அரசன் விழித்து, தன்னெதிரிலிருக்கிற வல்லூறு என்கிற பட்சியை சைகை செய்து அழைத்து, தனது வீரியத்தை ஒரு இலையை எடுத்து வட்டில் போல் தைத்து அதில் புகட்டி, இதை என் மனைவியிடம் கொண்டுபோய்க்கொடு என்று வேண்ட அப்பட்சி அதை மூக்கினாலேற்றுக் கொண்டு பறந்து போனது. போகும் பொழுது ஒரு ராஜாளிப்பட்சி அதன் வாயிலிருக்கிறதை இரை என்று நினைத்து எழும்பிப்பறந்து வந்தடித்து வல்லூறு ராஜாவின் மனைவியிடம் செல்லுகிறேனென்று புகன்றும் கேளாமல் சண்டைக்கு வந்தது. இருபட்சிகளும் சண்டையிடவே, வீரியம் வைக்கப்பட்டிருந்த வட்டில் போன்று தைத்த இலை கிழிந்து வீரியம் யமுனையாற்றில் இரண்டு துளியாக விழுந்தது.

பிரமன் வேலைக்காரி மீன் ஆனாள்.

ஒரு நாள் பிரமனின் பூசைக்கு ஜலந்திரட்ட அன்னவரின் பணிவிடை ஸ்திரீகளில் ஒருவள், பூகோளத்திலுள்ள யமுனையாற்றுக்கு வந்தபோது, மீன்கள் விளையாடிக்கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துவிட்டு பிரமனின் பூசை வேளை தப்பிய பின்பு சென்றாள். பிரமன் அவளை யமுனையாற்றில் மீனாகியிரு' என்று சாபமிட,

அவள் அதற்கு விமோசனங் கேட்க, வசுராஜன் வீரியம் யமுனையாற்றில் விழும்; அதைப்புசிப்பாய், வலையர்கள் உன்னைப்பிடித்து தாச ராஜனிடம் கொடுப்பார்கள் அவன் உன் வயிற்றைக்கிழிப்பான். அதுவே விமோசன காலம் என்றார்.

மீன் கர்ப்பத்தில் குழந்தைகள்.

இவ்வாறு பிரமனின் அப்சரஸ்திரீகளில் ஒருவள் யமுனையாற்றில் மீனுருவமாயிருந்தாள். வசுராஜனின் வீரியம் விழவே, மீனாகிய அவள் வீரியத்தை உட்கொண்டாள். அம்மீன் கர்ப்பமாகி பிரசவகாலம்சமீபித்திருக்கிற சமயத்தில், வலையர்கள் பிடித்து தாசராஜனிடம் கொடுத்தார்கள். அவர் அம்மீனின் வயிற்றைக்கிழிக்கவே; ஆண் பெண்ணாக இரு குழந்தைகள் தென்பட்டன. அதைக் கண்டு தாசராஜன் மகிழ அந்த அப்சரஸ்திரீ அந்தரத்திற்றோன்றி மேற்கண்டவற்றைத் தெரிவித்துப்போனாள்.

மச்சகந்தி பிறப்பு விநோதம்.

அதன்பேரில் தாசராஜன் அக்குழந்தைகளை எடுத்து வசுராஜனிடம் கொடுத்து விபரமாய்த் தெரிவித்தான். அவர் மகிழ்ந்து புத்திரனை எடுத்துக்கொண்டு, புத்திரியை தாச ராஜனுக்களித்து விட்டான். அந்தப்புத்திரிக்கு மச்சகந்தியென்று பெயரிட்டு வளர்த்து வரும்போது அவளிஷ்டப்படி ஒரு படகைக்கொடுக்க அவள் யமுனையாற்றில் வருகிறவர்களுக்குப் படகு விட்டுக்கொண்டிருந்தாள். நிற்க,

பராசர் புணர்ச்சி.

வசிஷ்ட முனிவருடைய பேரன் பராசர் தன்னால் உலகத்துக்கு நன்மையுண்டாகவேண்டுமென்று நினைத்து இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரம் உச்சமாகிற காலத்தில் ஒரு ஸ்திரீயைக் கூடவேண்டுமென்பதாய்த் தீர்மனித்து அக்காலம் வருகிற பரியந்தம் தவத்திலிருந்தார். அக்காலம் சமீபித்ததும் தவத்தை விட்டு நகரங்களுக்குச் செல்ல அதி வேகமாக வந்தார். குறுக்கே யமுனையைக் கடக்கவேண்டியதாயிற்று. யமுனையில் ஜலப் பிரவாகமெடுத்துக் கொண்டிருந்தது. ஆகையினால் மச்சகந்தியினுடைய படகின் உதவியை நாடினார். வேறு ஆளில்லாததால் படகுக்குப் பாரமிராதென்று அவள் மறுத்தாள். பராசர் தான் படகின் பாரத்துக்குச் சரியாயிருப்பதாகச் சொல்லி, அதிலேறி ஆற்றில் போய்க் கொண்டிருக்கும்பொழுது அந்த நக்ஷத்திரம் உச்சத்துக்கு வரக் கொஞ்சநேரம் இருந்தது. ஆகவே மச்சகந்தியிடம் தன் கோரிக்கையைத் தெரிவிக்க, அவள் தான் மங்கைப்பருவமாகவில்லையென்றும், தன்னங்கம் மச்சகந்தம் வீசுகிறதென்றும், இது சமயம் படகில் செல்லுகிறபடியால் கூடக்கூடிய இடமல்லவென்றும், பகற்காலமானதால் காலமும் சரியல்லவென்றும் சாற்ற, பராசர் தமது தவ வலிமையினால் ஆற்றின் மத்தியில் திட்டு உண்டாக்கியும், மச்சகந்தத்தை மாற்றியும், அவளை மங்கைப் பருவமாகச் செய்தும், சூரியனை மறைத்து இருள் உண்டாக்கியும் காண்பிக்க, அத்திட்டில் மச்சகந்திப் பராசரைக் கூடிக்கலந்தாள். உடனே வீரியம் ஸ்கலிதமாயிற்று. பராசர் எழுந்து ஆற்றைக் கடந்து நடந்தார்.

வியாசர் ஜனனம்.

மச்சகந்தி உடனே கர்ப்பமாகி மூன்றேமுக்கால்நாழிகையில் வேத வியாசரைப் பெற்றாள். அவர் உதயமான போதே மான் தோல், புலித்தோல், காவிகாம்பர சடாடவிதராய் வேதத்தைக் கையிற் பிடித்து உதயமானார். வேத வியாசர் தாயை வணங்கித் தந்தை எங்கே என்று கேட்க, மச்சகந்தி அதோ செல்லுகிறாரென்ன, வியாசர் தாயிடம் நீ நினைத்தபோது வருகின்றேனென்று சொல்லி விடைபெற்று, தந்தையிடஞ் சென்று தவஞ் செய்திருந்தார். பின் மச்சகந்தி முன்போல மங்கைப் பருவமடையாதவளாய்க் காணப்பட்டாள்.

பாரதம் உற்பத்தி.

அப்பால் பராசரும் வேதவியாசரும் கைலாசபதியைத் தரிசிக்கச் சென்று பணிய, அன்னவர் வேதவியாசரை யாரென்று வினவ, பராசர் தமது குமாரனாகிய வேதவியாசர் என்றார். சிவன் இவனால் உலகத்துக்கு என்ன நன்மை என்று கேட்க, பராசர் இவனால் நாலு வேதமும் சீர்பட்டு ஐந்தாம் வேதம் என்கிற மகா பாரதக் கதையைச் செய்யப்போகிறானென்று சொன்னார். சிவன் அக்கதையை வியாசரைச் சொல்லச் சொன்னால் எனது குமாரனை எழுதச் செய்கிறேனென்றார். பராசர் வியாசனை நோக்க அக்குறிப்பையறிந்த வியாசர், மகா பாரதக் கதையைச்சொல்ல கணபதி மகாமேருவை ஏடாகவும், தனது கொம்பை எழுத்தாணியாகவும் கொண்டு

பாரதத்தை எழுதிமுடித்தார். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

நமது ஆராய்ச்சி.

வேதத்தை எழுதிய பண்டைய ஆரிய மக்கள் உலகமே நம் இந்தியாதான் என்று மதித்திருந்தார்களென்று ஊகிக்கலாம். மற்ற நாடுகளைப்பற்றி எள்ளளவேனும் தெரிந்திருக்கமாட்டார்கள். அவைகளைப் பற்றித் தெரிந்திருந்தால் இப்பொழுது இருக்கிற நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், முப்பத்திரண்டு உபநிடதம், அறுபத்துநாலு கலைக்ஞானம் முதலியவற்றைவிடப்பன்மடங்கு அதிகமாகச் செய்திருப்பார்கள். அவர்கள் கடல்சூழ்ந்த நெடிய உலகத்தில் என்று எழுதக் காரணமென்ன? உலகமே அவ்வளவுதான் என்று எண்ணியிருக்கலாம். மேலும் புராணங்கள் மற்றுமுள்ளவைகளை எழுதி அவைகளை வியாசர் கணபதிக்குச் சொல்லி எழுதினாரென்றும், வைசம்பாயன முனிவர் ஜனமேஜய மகாராஜனுக்குச் செப்பினாரென்றும், சூதபுராணிகர் சவுனகாதி முனிவருக்கு உரைத்தாரென்றும் எழுதியிருப்பதின் கருத்தென்ன? தாங்கள் எழுதியதாக எழுதினால் உலகத்தை ஏமாற்ற முடியாதென்றும், அவர்களின் சுயநலம் வெளியாகுமென்பதுமே அவர்களின் அடிப்படையான கருத்தாகும்.

வைதீகர்களே ! கவனியுங்கள்.

தவஞ்செய்த வசுராஜனுக்கு இந்திரன் நினைத்த லோகத்துக்குச்செல்ல விமானம் ஒன்றும் சத்துருவைக் கொல்ல மூன்று வஸ்துகளையும் வழங்கினான். தற்சமயம் அமெரிக்கா அன்பர்கள் ஆகாயவிமானத்தில் சந்திரமண்டலத்துக்குப் போகப் பிரயாசைப் படுகிறார்கள். வசுராஜன் அதேபோல் இந்திரனின் உதவியால் போனான் போலும் இந்திய வைதிக மக்கள் இந்திரனையும் மற்ற புராணக்கடவுளையும் நம்புவதனால் அவர்களுக்கு இந்திரனால் விமானம் கொடுக்கப்பட்டு ஒருவேளை அமெரிக்கரை விட சித்தி பெறலாம் என்பதே அவர் கருத்துப்போலும். வசுராஜன் சுத்தமதியென்னும் நதியருகிலிருக்கிற வெற்பைக் காலினால் நதியில் தள்ளினான். மானிட அரசனுக்கு அவ்வளவு பலமிருந்தது ஆச்சரியம் அந்நதி பெண்ணுருக் கொண்டு கோலாகலமென்கிற வெற்பைக் கணவனாகக்கொண்டு சம்போகஞ் செய்தது என்பது, நதி எவ்வாறு பெண் ரூபந்தரிக்கமுடியும்? வெற்பை எவ்வாறு ஆண்ரூபமடையும்? இவ்வாறு புராணங்களில் கூறப்பட்டிருப்பதை விட மானிட அநுபோகத்தில் தெரியவில்லை.

நதிபேசுமா? குழந்தை பேசுமா?

மேலும், நதி பேசிற்றென்பதும், புத்திரர்களைப் பெற்றதென்பதும் எவ்வளவு அறிவீனமான காரியம். புத்திரர்களை எவ்வாறு போஷித்ததோ? ஜலத்தினுள் எவ்வாறு வைத்திருந்ததோ? அறிகிலோம். வசுராஜன் காட்

டில் நித்திரை செய்யும்பொழுது கிரிகை என்பவளைக் கூடி ஞற்போல் கனவுகண்டு வீரியம் ஸ்கலிதமாகினதாம். கனவில் கண்டு போகமனுபவிக்கிற நினைப்புக்கு வீரியம் எவ்வாறு ஸ்கலிதமாகும்? அந்தராத்திரியில் வல்லூறு எதிரே இருக்கக்காரணமென்ன? வீரியத்தை வசுராஜன் மனைவியிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி வல்லூறை வேண்டினராம். பட்சிக்கு இவ்வித அறிவு இருக்குமா? அரண்மனையில் துயில் கொள்ளும் அரசியை எவ்வாறு இரவில் பார்க்கமுடியும்? வல்லூறு போகும் வழியில் ராஜாளிப்பட்சி சண்டையிட்டதாம். ராஜாளிக்கு வல்லூறு அரசியிடம் போவதாய்த் தெரிந்திருக்கும் அதற்கு அறிவிருந்தால் சண்டையிடுமா?

பிர்மனுக்குப் பூசை செய்ய அவனுடைய உலகத்தில் நதியில்லை போலும். பூலோகத்திலுள்ள யமுனையாற்றில் மீன் விளைதத்தைப் பார்த்து வேளைத் தப்பிச் சென்றதற்காக அப்ஸரத் ஸ்திரீயை மீனாகச் சபித்துவிட்டார். இவ்விதம் சிறு குற்றம் புரிந்த அவளைத் தண்டித்தால் மானிடராகிய அவரின பக்தர்கள் எவ்வளவோ தப்பிதம் செய்யக்கூடும். அவைகளைப் பொருக்காமல் தண்டனை விதித்தால், அதனை அனுபவித்துக் கஷ்டமடையவேண்டியதுதான் போலும்.

மீன் வயிற்றில் மனிதக் குழந்தை உண்டாவதெப்படி?

வசுராஜனுடைய வீரியம் யமுனையில் விழுந்தபோது அப்சர ஸ்திரீயாகிய மீன் எவ்வாறு தெரிந்து புசித்ததோ? ஆற்றில் மீன்கள் அதிகமாயிருக்க அவைகள்

புசித்திருக்கக்கூடாதா? மீனை வலையர்கள் பற்றி தாசராஜனிடம் கொடுக்க அவன் மீனின் வயிற்றைக் கிழித்தான். அவன் அவ்வாறு பக்குவமாய்க் கிழிக்கக்-காரணமென்ன? வயிற்றினுள் குழந்தையிருப்பதை அறிவதற்கு முன் அவ்வாறு செய்வானா? மீன் வீரியத்தை வாயில் விழுங்கினால் அது எவ்வாறு கர்ப்பாசயம் அடையும்? மானிடக்கர்ப்பாயசத்துக்கும், மீனின் கர்ப்பாசயத்துக்கும் எவ்வாறு பொருந்தும்? இரண்டுக்கும் வித்தியாசமிருக்க, குழந்தைகள் எவ்வாறு உண்டாகும்? மீன் வயிற்றில் குழந்தைகள் உண்டானதென்பது பொருந்தா உரையாகும்.

பாராசர் ஸ்திரீயின் கற்பை அழிக்கலாமா?

வசிஷ்டனுடைய பேரன் பாராசர் இருபத்தேழு நக்ஷத்திரங்களில் ஒரு நக்ஷத்திரம் உச்சமாயிருக்கையில், ஒரு ஸ்திரியைக் கூடி ஒரு புத்திரரைப்பெறவேணுமென்று வாஞ்சித்தார். தான் நினைத்தவுடன் எதுவானாலும் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த பாராசர், ஏன் நினைத்தவுடன் நகரத்துக்குச் செல்லக்கூடாது? ஆற்றைக்கடக்கப்படகின் உதவி எதற்கு? மங்கைப் பருவமடையாதமச்சகந்தியைப் புணர்ந்தார் பாராசர். அவர் அறிவிற் சிறந்த முனியாயிருக்க, அவரே ஒரு ஸ்திரீயைக் கற்பழிக்க ஆரம்பித்தாரானால், அறிவில்லாதவர்கள் எவ்வாறு நடப்பார்கள்? இருவரும் கலந்தவுடன் வீரியம் ஸ்கலிதமாகி மூன்றேமுக்கால் நாழிகையில் வியாசர் பிறந்தார். மக்களைப் பெறுவதற்கு ஒரு ஸ்திரீயானவள் கற்பமாகி 280 நாட்கள் கழித்துப் பிள்ளைகளைப் பெறுவது உலக இயற்கை

அதைவிட்டு ஒன்றரை மணி நேரத்தில் வியாசர் பிறந்தாரானல் எவ்வாறு நம்ப இயலும்? பிறக்கும்போதே காவிகாம்பர சடாட விதாராய் வேதத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு பிறந்தார். கர்ப்பாசயத்தில் இவைகளோடு எவ்வாறு கட்டுண்டிருந்தாரோ? பிறந்த வுடனே தாயிடம் விடைபெற்றுத் தவத்துக்குப் புறப்பட்டார்!

வேதவியாசர்-மகாபாரதக் கதையைச்சொல்ல விநாயகர் மகாமேரு மலையை ஏடாகவும் தனது கொம்பை எழுத்தாணியாகவுங் கொண்டெழுதி முடித்தார். மகாமேரு மலையை ஏடாகக்கொண்டு எவ்வாறு எழுதியிருப்பார்? பெரிய மலையை ஏடாக எவ்வாறு கையிற் பிடித்தாரோ? இவ்வேதம் எழுதிய காலத்தில் அநேகர் காமத்தின் கரைகாணுது அலைந்தார்களென்பது வெள்ளிடைமலை. புராணம் எழுதிய காலத்திலுள்ள பண்டை ஆரிய மக்கள் தங்களைப்பெரிய முனிவர்களென்றும் வைதீகர்களென்றும், சொல்லிக்கொண்டு, தங்களுக்கு இச்சைப்பட்டபோது மங்கைப் பருவமடையாத பெண்களையும், அழகுள்ள ஸ்திரீகளையும் கற்பழித்தார்களென்பது நன்கு அறியலாம். மகாபாரதத்தின் கண் பொய்யும், புரட்டும், மலிந்து கிடக்கின்றது என்பதற்கு யாது ஐயம் உள்ளது? இனிமேல் செல்லுதும்.

இரண்டாவது அத்தியாயம்.

பாரத வீரர்களின் வரலாறும், இந்திர லோகத்தின் தாசிகளும்

சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனுடலில் அத்திரி, அரீசி, புலத்தியன், கிரன், கிருத்து, புலகன் என்னும் ஆறு புத்திரரும் அப்பிரமன் வலது பாதத்துப் பெரு விரலில் தக்கனும் இடது பாதத்துப் பெருவிரலில் தாணி என்னும் ஒரு பெண்ணும் உதித்தனர். அவ்வாறு உதித்த ஆறு புத்திரர்களில் அரீசியின் புத்திரன் காசிப ரால் உலகம் விர்த்தியாயிற்று. இது பிரபஞ்ச உற்பவம். இனி, பாரத வீரர் உற்பவத்தைக் கவனிப்போம்.

யாதவ குல சிகாமணியாகிய வசுதேவனுக்குத் தேவகி, உரோகிணியென இரு மனைவியர் உண்டு. தேவகிக்குக் கிருஷ்ண சுவாமியென்றும், உரோகணிக்குப் பல ராமனென்றும் இரண்டுருவாகத் திருமால் அவதரித்தார். அஷ்ட லட்சுமிகள் அமிசையால் ருக்மணி முதலாகிய எட்டுப் பட்ட ஸ்திரீகள் பிறந்தார்கள். அப்ஸர ஸ்திரீகள் அமிசையால் கோபியர்கள் பிறந்தார்கள். பிரபாசனர் என்ற எட்டாம் வசு அமிசையால் காங்கேயன் (பீஷ்மர்) பிறந்தான். அசுர குல குருவாகிய சுக்கிராச்சாரி அமிசையால் துரோணச்சாரி பிறந்தான். காமக் குரோதத்தின் அமிசையால் அசுவத்தாமன் பிறந்தான். ஏகாத ருத்திரர் அமிசையால் கிருபாச்சாரி பிறந்தான். சூரியன் அமிசையால் கர்னன் பிறந்தான். துவாபர யுக புருஷன் அமிசையால் சகுனி பிறந்தான். கந்திருவர்க்கு

அரசனாகிய அமிசன் அமிசையால் திருதராக்ஷதன் பிறந்தான். வசுவமதி என்னும் தேவதை அமிசையால் காந்தாரி பிறந்தாள். திருதராக்ஷதனுக்கும் காந்தாரிக்கும் கலிபுருஷன் அமிசையால் சுயோதனன் பிறந்தான். விச்சிரவாகு என்னும் அசுரன் வழியிற்றோன்றிய அசுரர்கள் அமிசையால் சுயோதனன் தம்பிமார்கள் பிறந்தார்கள். இரணியகசிபின் அமிசையால் சிசுபாலன் பிறந்தான். பிரகலாதன் அமிசையால் சல்லியன் பிறந்தான். விப்பிரசித்தி என்னும் அரக்கன் அமிசையால் ஜராசந்தன் பிறந்தான். திரிகுனன் அமிசையால் விதுரன் பிறந்தான். யக்ஷகர் அரசன் அமிசையால் பாண்டு பிறந்தான். சித்திரபுத்தி என்கிற தேவதை அமிசையால் குந்தி, மாத்திரை என்ற இருவர் பிறந்து, அந்தப் பாண்டு ராஜனுக்கு மனைவியானார்கள். யமன் அமிசையால் தருமனும், வாயு அமிசையால் பீமனும், இந்திரன் அமிசையால் விஜயனும், அஸ்வினி தேவதைகள் அமிசையால் நகுல சகாதேவர்களும் பிறந்தார்கள். இவர்கள் உலகத்திற் பிறந்து பலுகிப் பெருகி முடிவில் போர்க்கோலங் கொண்டு பூமி பாரத்தை நீக்கி, அவரவர்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். (இவர்களின் வரலாறுகளை வருமிடங்களில் கவனிப்போம்.)

தக்கன் மகளான அதிதிக்கும், காசிபருக்கும் சூரியன் பிறந்தான். சூரியனுக்கும் சாயா தேவிக்கும் வைவசுதன், யமன், சனி, யமுனை, தபதி என்னும் ஐந்து மனுக்கள் பிறந்தார்கள். இவர்களில் வைவசுத மநுவால், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், என்னும் நான்கு வர்ணம் உண்டாயிற்று. இனிமேல் சந்திரகுலத் தோன்றலைக் கவனிப்போம்.

பரமனிடத்தில் வீற்றிருந்து சிறப்புற்றோங்கிய சந்திரன், புதன் என்ற ஒரு புத்திரனைப் பெற்றான். புதன் புரூருவனைப் பெற்றான். அவன் உலகம் புகழ நீதியாய் அரசாட்சி செய்து வந்தான். இந்திரனை நாடகசாலைப் பெண்களில் ஊர்வசி யென்பவள் மலர் கொய்து விளையாட பூங்கா வனத்திற்குச் சென்றாள். அவளை அசுரர்கள் தூக்கிக்கொண்டு போனார்கள். ஊர்வசி சத்த மிட்டாள். இந்திரனும் தேவர்களும் அசுரர்களுக்குப் பயந்து போகவே இல்லை. ஆனால் புரூருவன் கேட்டு அசுரரை வழிமறித்து அவர்களைத் துறத்திவிட்டு ஊர்வசியை மீட்டுக் கொண்டு இந்திரனிடம் சென்று அவளைத் தனக்கு அளிக்கும்படி கேட்டான். இந்திரன் அவ்வாறே சம்மதித்து ஊர்வசியைப் பார்த்து இவனுடனிருந்து ஒரு புதல்வனைப் பெற்று வைத்துவிட்டு வரும்படி ஆக்ஞாபிக்க அவ்வாறே இருவரும் பூலோகத்துக்கு வந்து, ஆயு யென்ற ஒரு புத்திரனைப் பெற்று வைத்துவிட்டு இந்திரனிடம் சென்றாள். ஆயுவுக்கு நகுஷன் பிறந்தான். அவன் நூறு அஸ்வமேத யாகஞ் செய்து இந்திரப்பட்டம் பெற்று பழைய இந்திரன் மனைவியாகிய புலோமிசை மேல் காதல் கொண்டு, அவளை அழைத்துவரக் கட்டளையிட்டான். அவள் தேவ குருவான பிரகஸ்பதியின் சோதனையின்படி பழைய இந்திரன் என்னிடத்துக்கு எவ்வாறு வருவாரோ அவ்வாறு வரச்சொல்லுங்களென்றாள். நகுஷன் பழைய இந்திரனைப்போல் ஏழு முனிவர்களால் சுமக்கப்பட்ட சிவிகையில் செல்லும்போது விரைவிற் செல்லுங்களென்று சொன்னான். அதை சிவிகை சுமந்து செல்கிற முனிவரிலொருவரான அஸ்தியர் கண்டு, எங்களை மதியாமற் விரைவிற் செல்லென்று சொன்னபடி

யால், நீ பெரும் பாம்பாய்ப் போகக்கடவதென்று சபிக்க, நகுஷன் அவரை வணங்கி இதற்கு விமோசனம் எப்போ வென்று கேட்க அகஸ்தியர் உன் மரபில் ஐவர் பிறக்கப் போகிறார்கள். அவர்கள்ஒரு காரியமாய் காட்டுக்கு வருவார்கள். அவ்வமயம் நீ பீமனை விழுங்குவாய், அப்போது உன் சாபம் நீங்குமென்று செப்பினார். நகுஷன் அவ்வாறே வனத்தில் பாம்பாயிருந்தான். இந்த நகுஷனுக்கு முன்னால் உலகத்திலிருக்கும்போது, யயாதி, சங்கியாதி, பிரயாதி என்ற மூன்று புத்திரர் பிறந்தார்கள். அவர்களில் யயாதி மிகவும் சிறப்பாய் அரசாட்சி செய்து அசுரகுல குருவாகிய சுக்கிரபகவான் பெற்ற தெய்வயானை என்னும் ஸ்திரீயை மணஞ் செய்து, அவளிடமாய் இரண்டு புத்திரர்களையும், அசுரர் குலத்தலைவனான விடபன்மன் மகளான சன்மிஷ்டையைக் கூடி அவளிடமாய் மூன்று புத்திரர்களையும் பெற்றான். இவ்வரலாறுகளை ஆராய்வோம்.

பாரத வீரர்கள் வரலாறுகள் அவசியமில்லா விட்டாலும் பின் வருமிடங்களில் இவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது இவர்களின் வரலாறு தெரிந்திருந்தால் ஆராய்ச்சியைப் படிக்க இனிமையாய் இருக்குமாகையால் அவற்றை எழுதினோம். நிற்க, ஊர்வசியை அசுரர்கள் தூக்கிக்கொண்டு போனார்கள். இந்திரனால் அவளை மீட்க முடியவில்லை. இந்திரனுக்கு மற்ற நாடகசாலைப் பெண்களேதற்கு? இந்திர லோகத்திலும் பல தாசிகள் இருந்ததாகத்தெரிகிறது. கடவுளிடத்திலேயே தாசிகளிருந்தார்களானால், மானிடர் தாசிகளை விரும்புவது மிகையாகாது. இந்திரனிடத்திலேயே தாசிகளிலிருந்ததாய் எழுதிய ஆரியமக்கள் பூலோகத்திலேயும் தாசிகள் வேண்டுமென்றும், பொட்டுக்கட்டும் வழக்கமும இருக்கவேண்டுமெ

ன்றும் வாதாடுவது ஆச்சரியத்தை உண்டாக்கக் கூடிய தல்ல: அசுரர்களிடம் சண்டை செய்து ஊர்வசியை மீட்க முடியாத இந்திரன் தனது அரசாட்சியை அமரருலகத்தில் எவ்வாறு நடத்துவான்? இவனிடத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களிருக்க, அசுரனை ஜெயிக்க முடியாமாற்போன காரணமென்ன? இவனுடைய யோக்கியதையை இன்னும் வருமிடங்களில் பார்ப்போம். ஊர்வசி தாசியானதால், அசுரர்கள் தூக்கிச்சென்றது வியப்பாகாது. ஊர்வசியாகிய தாசி, அநேகர்களைக் கெடுத்து தனது காம வலையில் சிக்கும்படி செய்து, அவர்களின் தவங்களைக்கெடுத்து நாசப்படுத்திய விவரங்களை பின் வருமிடங்களில் ஆராய்வோம்.

புரூரவன் அசுரர்களை ஜெயித்து ஊர்வசியை மீட்கிறான். உலகத்தை ஆளுகின்ற இந்திரனால் ஜெயிக்கக் கூடாத அசுரர்களை எவ்வாறு ஜெயித்தான். அவ்வளவு வலிமை எவ்வாறு கிடைத்ததோ? இந்திரன் மானிட அரசனைவிட பலமற்றவனாக இருக்கிறான். பகைவரை ஜெயிக்கமுடியாத இந்திரனுக்கு அரசாட்சி எதற்கு? நிற்க,

நகுஷன் சாபம்.

ஆயுவுக்கு நகுஷன் பிறந்தான். அவன் நூறு அஸ்வமேத யாகஞ்செய்து இந்திரப் பட்டம் பெற்றான். இவ்வளவு வல்லமையோடு யாகஞ்செய்து இந்திரப் பட்டம் பெற்ற நகுஷன் பழைய இந்திரன் மனைவியை விரும்பியிருக்கக்கூடுமா? நகுஷனை ஏழு முனிவர் சிவிகையில் தூக்கிச்சென்றார்கள். நகுஷன் விரைவிற் செல்லுங்களென்று சொல்ல அகத்தியர் சபிக்கிறார். இம்முனிவர்கள் சிவிகை

தூக்கிச்செல்ல வேண்டிய வேலை செய்கிறவர்களாயிருக்க, தன் கடமையை மறந்து சபிக்கிறார். இவர்கள் வல்லமையுடைய முனிவர்களானால் ஏன் சிவிகை சுமக்க வேண்டும்? சிவிகையில் செல்கிறவன் பெரியவனா? அல்லது அதைச்சுமக்கிறவர்கள் பெரியவர்களா? சிவிகை சுமக்கக் கூடிய அகஸ்தியரிட்ட சாபம் எவ்வாறு பலிக்கும்? இவ் வரலாறு அறிஞர் ஒப்புமாறு இல்லை. நகுஷன் அகஸ்தியரை வணங்கிச் சாப விமோசனம் கேட்க, அவர் நீ வனத்தில் பிமலை விழுங்குவாய்; அப்போது சாபம் நீங்கும் என்பதாகக் கூறுகிறார். இவ்விதமாகச் சிறிய குற்றம் செய்ததற்கு நீண்ட காலம் வருந்தும்படி சபிக்கிறார். குற்றத்துக்குத் தக்க தண்டனை தான் செய்யலாமேயன்றி அதிகத் தண்டனை கொடுப்பது அறிவில்லார் செய்கையாகும். அகஸ்தியர் தமிழுக்கு இலக்கணம் செய்த கல்வியறிவாளராயிருக்க, இவர் செய்கை அறிஞர் ஒப்புமாறு இல்லை. இனிமேல் செல்லுதும்.

மூன்றாவது அத்தியாயம்.

சஞ்சீவி மந்திரம்.

முன் அத்தியாயத்தின் கடைசியில் கூறியபடி யயாதி மகா ராஜன் பிரம குலத்திலுள்ள சுக்கிராச்சாரி மகளைக் கலியாணம் செய்ததின் காரணத்தை வைசம்பாயனர் கூறுகிறார். முன் விடபன்மன் என்ற அசுர அரசன் இந்திரனோடெதிர்த்து யுத்தம் செய்து தோற்றான். அதனால் அவ்வரசன் தனது குரு சுக்கிராச்சாரியை வேண்டினான். அவர், தான் அருமையாகத் தவஞ் செய்து பெற்ற சஞ்

சீவி மந்திர சக்தியால் இறந்த விடபன்மன் சேனைகளை உயிர் பெற்றெழச் செய்தார். மறுபடியும் அவ்வரசன் இந்திரனோடெதிர்த்து வெற்றி பெற்றான். இந்திரன் வருந்தித் தனது தேவ குருவாகிய வியாழ பகவானிடம் முறையிட்டான். அவர் தனக்கு அவ்வளவு பலமில்லையென்று கூற; இந்திரன், சுக்கிரச்சாரியாரிடமிருந்து சஞ்சீவி மந்திரத்தைக் கற்றுக்கொண்டுவர யாரிருக்கிறார்களென்று கவனிக்கவே வியாழபகவான் புத்திரனாகிய கஜன், தான் போய்ச் சஞ்சீவி மந்திரம் கற்று வருவதாய் வாக்களித்து சுக்கிராச்சாரியிடம் வந்து அவரை வணங்கி "தங்களுக்குப் பணிவிடை செய்கிறேன்; தங்களுக்கு என்மேல் என்றைக்கு அன்பு உண்டாகிறதோ அன்று தாங்கள் கற்ற சஞ்சீவி மந்திரத்தை எனக்குக் கற்பிக்கவேண்டு"மென்று வேண்டினான். சுக்கிராச்சாரி தாம் அருமையாய்ப்பெற்ற மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தால் தனக்குப் பலிக்காதே என்றும், தானே வந்து பணிவிடை செய்கிறேனென்று சொல்லுகிறவனை வேண்டாமென்றால் சாஸ்திர விரோதமென்றும், மந்திரத்தைச் சொல்லாமலிருக்கலாமென்றால், பணிவிடை செய்கிறவன் மேல் என்றைக்காவது சந்தோஷம் வரும்; அவ்வமயம் கட்டாயம் சொல்லவேண்டி வருமென்றும் யோசித்து வேறு வழி இல்லாததினால் ஒப்புக்கொண்டார். அதுமுதல் கஜன் சுக்கிராச்சாரிக்குப்பணிவிடை செய்து வந்ததோடு தெய்வ யானையோடு வேத சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்துவந்தான். இவைகளினாலும், கஜன் மிக்க அழகு வாய்ந்தவனானபடியினாலும், தெய்வயானை அவன் மேல் காதல் கொண்டாள். இப்படிச் சிலகாலம் செல்ல சுக்கிராச்சாரியாரிடம் கஜன் சஞ்சீவிமந்திரத்தைப் பெற்

றுக்கொள்ள வந்திருக்கிறான் என்பதை விடபன்மன் கேள்விப்பட்டு, தனது தூதர்களால் கஜன் தருப்பை, சமிதை முதலானவைகளைக் கொய்யக் காட்டிற்குச்சென்ற சமயம், கஜன் கழுத்தையறுத்து பூமியில் புதைத்து விட்டான். பின்பு தெய்வயானை தனது தகப்பனாரிடம் "கஜன் ஏன் வரவில்லை" என்று கேட்க, சுக்கிராச்சாரியார் தனது ஞானதிருஷ்டியால் அவன் இறந்ததைக் கண்டு சஞ்சீவி மந்திரத்தால் அவனை எழுப்பிவிட்டார். மறுபடியும் சில நாட்கள் சென்றபின்பு கஜன் பிழைத்திருப்பதையறிந்த விடபன்மன் தனது அசுரரில் சிலரை அனுப்பி கஜனைக் கொலை செய்து மதுவோடு சேர்த்து, நமது குருவுக்குக் கொடுத்து பானஞ் செய்யச் செய்துவாருங்களென்றான். அவர்கள் அவ்வாறே சென்று கஜனைக் கொலை செய்து மதுவோடு சேர்த்துக் குருவுக்குக் கொடுத்தனர். அவர் முன் பின் யோசியாமல் மதுக்குடத்தை எடுத்து மட மட வென்று வாயில் ஊற்றிக்கொண்டார். அசுரர்கள் சென்று தமது அரசனுக்கு அறிவித்தனர்.

சுக்கிராச்சாரி மதுவால் மயக்கங் கொண்டார். கஜன் வாராதிருப்பதை யறிந்து தெய்வ யானை தனது தகப்பனாரிடம் சென்று அவனை வரவழைக்கும்படி கேட்டாள். சுக்கிராச்சாரி மகளைப்பார்த்து "கஜனை நீயேன் அடிக்கடி வந்து கேட்கிறாய்? போனவன் வருவான்' என்று குடி வெறியினால் கூறினார். தெய்வயானை வருத்தமடைந்து, "ஐயா! தாங்கள் மதிமயங்கி இருப்பதாகத் தோன்றுகிறது. தாங்கள் சகல கலை வல்லவராயிருந்தும் இவ்வாறு கூறுவது சரியல்ல; கஜன் எனக்குப்பாலிய சிநேகம். அவனைப் பிரிந்திருக்க என் மனம் கல்லல்ல வென்று" சொல்ல அவர் மயக்கந்தெளிந்து கஜனை அழைக்கிறேனென்று

வாக்குறுதி'கொடுத்து கஜனை எங்கிருக்கிறனென்று தமது ஞானதிருஷ்டியால் கவனிக்க, சொர்க்க, மத்திய, பாதாளம், முதலிய மூன்றுலகத்திலும் காணுதபடியால் எங்கு சென்றனென ஐயுற்றுத் தனது யாக்கையுள் நோக்கினர். கஜன் தன் வயிற்றினுள்ளிருப்பதை யறிந்து மதி மயக்கத்தினுல் தனக்குக் கெடுதிவருவதை யோசிக்காமல் சஞ்சீவி மந்திரத்தை யுச்சரித்தார். உடனே கஜன் உயிர் பெற்றுன். அதற்குள் சுக்கிராச்சாரியைப் பிடித்திருந்த கள் வெறியும் நீங்கி விட்டது. சுக்கிராச்சாரி நமக்கு மோசம் வந்தது என்று நினைத்து, கஜனைப்பார்த்து "கஜனே! உன் விருப்பத்தின்படி சஞ்சீவி மந்திரத்தைக் கற்பிக்கிறேன். என் வயிற்றைக் கிழித்துத்தான் நீ வெளியில் வரவேண்டும். நீ வெளியில் வந்து சஞ்சீவி மந்திரத்தால் என்னை எழுப்பிவிடு" என்று கூற, கஜன் அவ்வாறே செய்து தெய்வயானையிடம் சென்றுன். அப்பால் சிலகாலம் பணிவிடை செய்து தனது குருவாகிய சுக்கிராச்சாரியிடம் நான் வந்த காரியம் சித்தியாயிற்று என்பதாகச் சொல்லித் தன்னிருப்பிடம் போக விடை பெற்றுக் கொண்டு தெய்வயானையிடம் சென்று "கன்னிகையே! நான் நாடிவந்த பொருள் சித்தியாயிற்று. ஆகையால் நான் என் இருப்பிடத்திற்குச் செல்லவேண்டு"மென்று வினவ, அவள் "நான் அசுர குரு புத்திரி; நீ தேவ குரு புத்திரன்; நாமிருவரும் சமம்; ஆகையால் நீ என்னை விவாகஞ் செய்துகொண்டு இவ்விடமிருந்து எல்லா நலனும் அனுபவியும்; அல்லது தங்கள் தந்தையார் இருப்பிடம் செல்ல வேண்டுமானுலும் அவ்வாறே செய்வோம்" என்று தன் கருத்தை வெளியிட்டாள். அதுகேட்ட கஜன், என்னினும் விவேகமுள்ள நீ, சுத்த மவுடிகர்போல் பேசுகிறய்.

உன் தந்தையிடத்தில் நான் வேதம் கற்றதுமன்றி, யாவராலும் பெறமுடியாத சஞ்சீவி மந்திரத்தையும் பெற்றபடியால், அவர் எனக்குத் தந்தையாகவேண்டும். ஆகையால் உன்னை விவாகஞ் செய்வது தகுதியன்று. நீ என் குரு புத்திரியாகையால் நீ எனக்குத் தங்கையாகவேண்டும்'' என்றான் தெய்வயானை: ''கஜனே! நீ என் கருத்துக்கு இசையாதபடியால், என் தந்தையிடம் கற்ற சஞ்சீவி மந்திரம் பலிக்காமற் போகக்கடவது'' என்று சபித்தாள். அதைக் கேட்ட கஜன்: ''நீ தரும சாஸ்திரங்கற்றுணர்ந்திருந்தும் என்னைச் சபித்தபடியால், உன்னை மறையவர் மணம்புரியாமல், பூலோகத்து அரசன் மணம் புரியக்கடவது'' என்று சபித்துவிட்டுத் தன்னிருப்பிடஞ் சென்று, சஞ்சீவி மந்திரத்தைத் தன் தந்தைக்கு உபதேசஞ் செய்து அவரால் இந்திரனுக்கு வெற்றியடைவித்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

நமது ஆராய்ச்சி.

விடபன்மன் சுக்கிராச்சாரியருடைய உதவியால் இந்திரனை ஜெயித்து வெற்றி பெறுகிறான். முதன் முதலில் விடபன்மன் தோல்வியுறுகிறான் சுக்கிராச்சாரி இறந்த சேனைகளை எழுப்பிக்கொடுத்தாரேயன்றி வேறொன்றுஞ் செய்யவில்லை. முதலில் உள்ள சேனைகள் தான் இரண்டாவது தடவையும் இருந்திருக்கிறது. அப்படியிருக்க முதலில் ஜெயிக்கமுடியாதது இரண்டாவது தடவை எவ்வாறு ஜெயிக்கமுடிந்ததோ! இந்திரனிடம் அளவற்ற தேவர்களிருக்க, அசுர அரசனை ஜெயிக்க முடியாத காரணமென்ன? இவனுடைய பலமற்ற தன்மையை முந்தின கட்டுரையிலும விவரித்தோம இன்னும் வருமிடங்களிலும் விளக்குவோம். இந்திரன் வியாழ பகவானிடம் முறையிடுகிறான். வியாழ பகவான் தேவ

குருவாயிருந்தும் அவர் தன்னால் முடியாது என்று கூறுகிறார். இவ்வளவு பலமில்லாதவன் குருவாயிருப்பதற்குத் தகுதியா? என அறிஞர் சிந்திப்பாராக. வியாழ பகவான் மகனாகிய கஜன் சுக்கிராச்சாரியிடம், சஞ்சீவி மந்திரம் கற்று வருவதாய்ப் போய் அவரிடம் பணிவிடை செய்து கொண்டிருந்தான். தேவ குருவினுடைய மகனாகிய கஜன் இவ்வாறு இழி தொழில் செய்யவும் வேண்டுமா? கஜன் சுக்கிராச்சாரிக்குப் பணிவிடை செய்து தெய்வயானையுடன் வேதம் படித்து வந்தான். கஜன் மிக்க அழகு வாய்ந்தவனானபடியால், தெய்வயானை அவன்மீது காதல் கொண்டாள். குணத்தாலும், நலத்தாலும் அழகு மிக்க ஒரு யுவனை ஒரு யுவதி காதல் கொள்வது இயல்பு. கஜன் அவளைக் காதலிக்கவில்லை. ஆகவே ஆரியப் பெண்கள் தங்களுக்கு இச்சையானவர்களுடன் சேர்ந்து பழகிக் காதல் கொள்வது வழக்கமாயிருந்திருப்பது இதனால் அறியக்கிடக்கின்றது.

நம்பத்தகாத விஷயம்.

விடபன்மனுடைய ஏவுதலினால், கஜன் இரு தடவைக் கொலை செய்யப்படுகிறான். முதல் தடவை சஞ்சீவி மந்திரத்தால் சுக்கிராச்சாரி எழுப்ப, விடபன்மன மறு தடவையில் அவனைக்கொலை செய்து மதுவோடு கலந்து குருவுக்குக் கொடுத்துவிடுகிறான் ஆரியர்கள் மதுபானம் அருந்தி வந்தார்களென்று இதிலிருந்து தெரிகிறது இவ் விழி செயலை மேற்கொண்ட ஆரியர்களின் மனப்பான்மையை அறிஞர் சிந்திப்பாராக! அதிலும் மனிதனைக் கொலை

செய்து, அதை மதுவோடு கலந்து கொடுத்ததை குருவாகிய சுக்கிராச்சாரி அறியாரென்றால் அவரின் கேவல புத்தி இதனால் தெற்றெனை விளங்கும். இவ்விழி செயலை மேற்கொண்ட குருவாகிய சுக்கிராச்சாரி சஞ்சீவி மந்திரத்தைத் தவஞ் செய்து பெற்றானென்றால் இதை நம்புவது எங்ஙனம்? சுக்கிராச்சாரி தனது ஞானதிருஷ்டியால் கஜன் எங்கிருக்கிறானென்று பார்த்ததில் மூன்று லோகத்திலுமில்லை என்பதாக அறிந்து தனது யாக்கையுள் நோக்குகிறார். மூன்று லோகத்தையும் ஞானதிருஷ்டியால் நோக்கினாரென்பது அறிஞர் ஒப்பக்கூடிய செயலல்ல. தனது யாக்கையுள் கஜன் இருப்பதையறிந்த குரு மயக்கத்தினால் சஞ்சீவி மந்திரத்தை உச்சரிக்கிறார். மதிமயக்கமுள்ளவனுக்கு சஞ்சீவி மந்திரம் எவ்வாறு ஞாபகத்துக்கு வந்ததோ? மந்திரத்தையுச்சரிக்க அவன் உயிர்பெற்றான். உயிர்பெற்ற கஜன் குருவின் யாக்கையுள் எவ்வாறு கட்டுண்டிருந்தானோ? ஒரு மனிதனுடைய தேகத்தில் இன்னொருவன் உயிர் பெற்று இருந்தானென்றால் இது இயற்கைக்கு மாறாகவும் முடியாத காரியமாயுமிருக்கிறதல்லவா? சுக்கிராச்சாரி, கஜனுக்குச் சஞ்சீவி மந்திரத்தைக் கற்பித்து தனது வயிற்றைக் கிழித்துக்கொண்டு வந்துவிடுமென்றும், அப்பால் அம்மந்திரத்தால் என்னை எழுப்பிவிடுமென்றும் கூறுகிறார். அவன் அவ்வாறே செய்தான். இதிலிருந்து சஞ்சீவி மந்திரத்தால் வேண்டியவர்கள் உயிர் பெற்றெழக்கூடுமென்பதாகத் தெரிகிறது. இம்மந்திரங்கற்ற கஜனைப்போன்ற அல்லது சுக்கிராச்சாரியாரைப்போன்ற குருவர் இவ்வுலகத்தில் தற்சமயம் இருப்பாரானால் இறந்த மக்களை எழுப்பி உலகத்தில் மரணம் என்பதையே அடி-

யோடு இல்லாமற் செய்யலாம். அவ்வாறு பலன் பெற்றால் மற்ற மேல் நாட்டார்கள் நம்மை மிகவும் கொண்டாடுவார்களென்பதற்கையமில்லை. தெய்வயானை தனது கருத்தை வெளியிடுகிறாள். ஆனால் கஜன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் சஞ்சீவி மந்திரம் உனக்குப் பலிக்கக்கூடாதென்று தெய்வயானை சபிக்கிறாள். யோகிகள் யோக மகிமையால் சபித்தால் அச்சாபம் பலிக்கும். ஆனால் ஒரு ஸ்திரீயானவள் சபித்தது எவ்வாறு பலிக்கும்? கஜன் "க்ஷத்திரிய அரசனால் நீ மணஞ் செய்யப்படுவாய்" எனக்கூறிச் சென்றான். ஸ்திரீகள் ஒரு புருஷனை மனதில் நினைத்துவிட்டால், அவனையன்றி மற்றவரை மணம் புரியமாட்டார்களென்பது சாஸ்திரத்தின் கூற்று. ஆனால் நமது சுக்கிராச்சாரியின் புத்திரியாகிய தெய்வயானை யயாதி மகாராஜனைக் கலியாணஞ் செய்து கொள்ளுகிறாள். ஆகையால் இவள் கற்புநிலை கெடுகிறது. இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் வரைவோம்.

————)*(————

நான்காவது அத்தியாயம்.

தெய்வயானையும், சன்மிஷ்டையும்.

சுக்கிராச்சாரி மகளாகிய தெய்வயானை, விடபன்மன் மகளாகிய சன்மிஷ்டையோடு சிநேகஞ் செய்து பல இடங்களிலுஞ் சென்று விளையாடி வரலாயினள். ஒரு நாள் இருவரும் ஒரு தடாகத்தில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வமயம் காற்றடித்ததால் கரையில் வைத்திருந்த ஆடைகள் எல்லாம் இடம் மாறிவிட்டது. ஸ்நா

னத்திற்குப் பின் இருவருடைய தாதிகளும் தங்களுக்குக் கிடைத்த ஆடைகளை உடுத்திக்கொண்டார்கள். சன்மிஷ்டை தெய்வயானையினுடைய ஆடையை உடுத்திக் கொண்டாள் தெய்வயானைக்கு அவளின் தாதிகள் சன்மிஷ்டையின ஆடையைக் கொடுத்தார்கள். தெய்வயானை "இது சன்மிஷ்டையின் ஆடை. இதை எடுத்துக் கொண்டு என் ஆடையைக் கொண்டுவாருங்கள்" என்று சொல்லத் தாதிகள், "உன் ஆடையை சன்மிஷ்டை தரித்திருக்கிருள்" என்று சொல்ல, தெய்வயானை "அவ்வஸ்திரத்தைத் தன் கையினுல் தொடேன்"னென்று மறுத்தாள். அதையறிந்த சன்மிஷ்டை அவளருகில் வந்து "கேவலமான உன் வஸ்திரத்தை நான் உடுத்திக்கொண்டு என்னுடைய உயர்ந்த ஆடையை உனக்குக் கொடுத்தால் ஏன் வெறுக்கிருய்" எனறு வினவ, தெய்வயானை "நீ ராஜபுத்திரிதானே; நான் உன் தந்தையின் குருபுத்திரி; மேலும் நான் பார்ப்பனி; நீ உடுத்திய அழுக்கு வஸ்திரத்தை நான் உடுத்திக்கொள்ளுவேனு?" என்று சொன்னுள். அதுகேட்ட சன்மிஷ்டை மிகச் சினந்து, உன் தந்தை என் தந்தையிடத்து வந்து கையேந்தி நிற்க நீ இறுமாப்படைந்து என்னை அற்பமாக எண்ணி என் வஸ்திரத்தை இகழ்ந்தாய்; உனக்கு அவ்வளவு வாயா" என்று கடுகடுத்துச் சீறித்தாளும் தன் தாதியரும் அவளைப் பிடித்து ஒரு பாழுங்கிணற்றில் வீழ்த்திச் சென்றூர்கள். தெய்வயானை கிணற்றில் அருகு முளைத்துப்படர்ந்திருக்கும் ஒரு கொடியைப் பற்றித் தொங்கிக்கொண்டிருந்தாள். அதுகாலை யயாதி மகாராஜன் ஜலந்தேடி அக்கிணற்றிற்கு வந்துபார்க்க, தெய்வயானையைக் கண்டு "நீ யார்? இந்தக் கிணற்றில் விழவேண்டிய காரணமென்

ன''வென்று கேட்க, தெய்வயானை சன்மிஷ்டையால் நடந்த விர்த்தாந்தத்தைச் சொல்லாமல் வேறு விதமாய்ச் சொல்லிக் கரையேற்ற வேண்டினாள். யயாதி மகாராஜன் அவள் கரத்தைத் தன் கையால் பிடித்துக் கரையேற்றிச் சென்றான்.

தெய்வயானை ஒரு சோலையில் வந்து தன்னந்தனியே பலவாறு நினைத்து வருந்தியிருக்க, விடபன்மனுடைய சாரதி ஏதோ ஒரு காரியமாய் அவ்விடம் வந்து, "இவ்விதம் தனியே இருக்கக் காரணமென்ன?''வென்று வினவினான். தெய்வயானை சன்மிஷ்டையால் நடந்த காரியங்களை நவின்று தன் தகப்பனருக்கு அறிவிக்கும்படி வேண்டினாள். அச்சாரதி தெய்வயானை சொல்லியவனைத்தும் சுக்கிராச்சாரியிடம் சொல்லிப்போனான். சுக்கிராச்சாரி உடன் வந்து தன் மகளுக்கு வேண்டிய சமாதானம் சொன்னார். ஆனால், தெய்வயானை விடபன்மனுடைய சபைக்குப் போகக்கூடாதென்று சுக்கிராச்சாரியைத் தடுத்து இவளிருக்க சோலையில் பன்னகசாலை இயற்றி அதிலிருந்தார்கள்.

ராஜசபைக்குக் குருவாகிய சுக்கிராச்சாரி வாராதிருப்பதையறிந்த விடபன்மன, குரு தங்கியிருந்த இடத்திற்குச்சென்று பார்த்து வரும்படி கட்டளையிட, தூதர்கள் வந்து அங்கில்லை என்றார்கள். அதைக்கேட்ட அரசன் "நமது குரு எங்கிருந்தாலும் ஒரு முகூர்த்தத்திற்குள் அறிந்து சொல்லுங்கள்'' என்று மந்திரிகளுக்குக்கட்டளையிட அவர்கள் தேட யத்தனித்தார்கள். இது விவரங் கேட்ட சாரதி, காட்டில் நடந்தவற்றை அரசனுக்கு அறிவித்தான். உடனே அரசனும் மந்திரி முதலானவர்களும்

சாரதியுமாக சுக்கிராச்சாரியிடம் வந்து வணங்கித் தன்னை ரக்ஷிக்க வேண்டுமெனக் கெஞ்சினான். குரு தனது குமாரத்தியிடம் பிரார்த்திக்கும்படி சைகை செய்தார் விடபன்மன் தெய்வயானை காலில் விழுந்து நமஸ்கரித்து "என்மகள் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். அவ்விதமில்லாவிட்டால் நீர் என்ன தண்டனை விதிக்கின்றீரோ அவ்விதம் செய்கிறேனென்று பிரார்த்திக்க மனமிரங்குகிறேன். தெய்வயானை "உனது புத்திரி செய்த குற்றத்துக்கு உயிர்க்கொலை செய்யவேண்டும். ஆனால் உனக்காக அவளும் அவள் தாதிகளும் எனக்குப்பணிவிடை செய்யவேண்டும்" என்று கூற, விடபன்மன் சம்மதித்துத் தனது நகரத்துக்குக் கூட்டிவந்து, சன்மிஷ்டையையும் அவள் தாதிகளையும் தெய்வ யானைக்குப்பணிவிடை செய்யும்படி ஏற்பாடு செய்தான். இப்படிச் சில நாட்கள் செல்ல தெய்வயானை சன்மிஷ்டையோடு ஒரு பூஞ்சோலையில் மலர் கொய்து விளையாடும் சமயத்தில், யயாதி மகாராஜன் முன்போல் வேடிக்கையார்த்தமாய் வந்தான். அச்சமயம் மேற்கண்ட இருவரையும் யாரென்று வினவத்தெய்வ யானை அரசனைப்பார்த்து "அரசனே! முன் ஒருமுறை என்னைக்கிணற்றிலிருந்து கரையேற்றினீர். இவள், விடபன்மன் மகள் சன்மிஷ்டை. இவள் தான் முன் என்னைக் கிணற்றில் தள்ளினாள். ஆதலால் இவளை என் பணிப்பெண்ணாக விடபன்மன் இருக்கும்படி செய்திருக்கிறார். முன் என்னைக்கரை சேர்த்த மாதிரி என்னை இன்று மணம்புரிய வேண்டும் என வேண்டினாள். அவ்வரசன் "நீபார்ப்பனியாதலால் வேதத்தில் கூறியபடி உன்னைநான் மணம் புரியக்கூடாது" என்று மறுக்கத் தெய்வயானை தனது பிதாவின் அனுமதியின் பேரில் விவாகஞ் செய்யச் செய்

கிறேனென்று கூற, அரசன் சரியென ஒத்துக்கொண் டான். உடனே தெய்வயானைத் தனது பிதாவை அழைத்துவரச்செய்து, "இவர் முன் என் வலக் கையைப் பிடித்துக்கிணற்றிலிருந்து கரை சேர்த்தவரா தலால் அவரையே மணம் புரியவேண்டும்; அல்லது என் கற்புக்கு அழிவு நேரிடும்" என்று வேண்ட, அவர் சரி யென ஒத்துக்கொண்டு கஜனால் நேரிட்ட சாபத்தை அர சனுக்கு அறிவித்து, அச்சாபப்படி நீ மணம்புரிவாயாக! என்று சொல்லி உடனே கலியாணத்துக்கு வேண்டியதை தயாரித்து இருவருக்கும் மணம் முடித்து, "அரசனே! இவள் பார்ப்பனி, இவளைக்கூடி வேறொரு ஸ்திரியைக் கூடினால் கெடுதி வரும் ஆகையால் விடபன்மன் புத்தி ரியாகிய சன்மிஷ்டைக்குப் புருஷபோகம் ஒன்று தவிர மற்றபோகம் கொடுக்கக் கடவாய்" என்று சொல்லி சுக் கிராச்சாரி விடைபெற்றுச் சென்றார். அப்பால் யயாதி மகாராஜன் சன்மிஷ்டையையும் தெய்வ யானையையும் அழைத்துக்கொண்டு தன் நகரஞ்சேர்ந்து சன்மிஷ்டை க்கு அந்தப்புரத்தில் ஒரு மாளிகை கொடுத்துத்தானும் தெய்வ யானையும், கூடிக்கலந்து இரண்டு புத்திரர்களைப் பெற்று வாழ்ந்திருக்கும் காலத்தில் ஒரு நாள் அர சன் தன் பள்ளியறையில் தெய்வயானையோடு சயனித் தான். தெய்வயானை உடனே நித்திரை போய்விட்டாள். அரசனுக்கு நித்திரை வாராததால், அந்தப்புரத்திலிருக் கிற சோலையில் உலாத்தி வருவோமென்று போனான்.

அது சமயம் சன்மிஷ்டைத் தனது நிலைமையை நினைத்துக் காம வேதனையால் வருந்தி உப்பரிகையின் மேல் உலாவிக்கொண்டு நின்று சோலையில் ஆளரவம் கேட்கிறதென்று சோலையில் போய்ப் பார்க்க, அரசனெ

ளைக்கண்டு "அரசனே! தெய்வயானைக்கு நான் தாதியா யிருந்தாலும் நான் அரசன் மகள். எங்களிருவருக்கும் பிரியாச் சிநேகம். ஆதலால் அவள் என்று உமக்கு மனைவியோ அன்றே நானும் உமக்கு மனைவி. ஆகை யால் என்னுடைய காமத்தைத் தணிக்கவேண்டும்" என்று சன்மிஷ்டை வேண்டினாள். ஆனால் யயாதி மகா ராஜன் "முன் நான் தெய்வயானையைக் கலியாணம் செய் யும்போது அவள் பிதா உனக்குப் புருஷப் போகம் தவிர மற்றவைகள் கொடுத்துதவும்படி கேட்டுக்கொண்டார் அதனால் நான் உன் விருப்பத்திற்கு இசைய முடியாது" என்று மறுக்கவே; சன்மிஷ்டை, "அரசனே! ஒரு உயி ருக்கு இடையூறு வரும்பொழுதும், ஆசைப் பெருக்கால் பெண்களை மணஞ்செய்யுமிடத்தும், விதி பிசகினால் தோ ஷமில்லை. எனக்கு ஒரு வரந்தரவேண்டும்" என்று வேண்டினாள். அரசனை சரியென ஒப்புக்கொண்டான். சன்மிஷ்டை, "தெய்வயானைக்குப் புத்திரர்களிருக்கிறமா திரி எனக்கு ஒரு புத்திர சந்தானம பாலியும்" என்று கேட்டாள். அரசன் தான் சொன்ன சொல் தப்பாது வேறு வழியில்லாமல் இசைந்து, அவளோடு கூடிக் குலா வியபின்பு, தன்னரண்மனை வந்து படுத்துக்கொண்டான். இவ்வாறு சன்மிஷ்டையோடு சுகத்தை அனுபவித்துக் கொண்டுவந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்,

நடது ஆராய்ச்சி.

சன்மிஷ்டையும் அவள் தாதிகளும், தெய்வயானை யும் அவள் தாதிகளும் ஸ்நானஞ் செய்யும்பொழுது கரை யில் ஆடையை வைத்திருந்தனர். இதிலிருந்து இவர்

கள் ஆடையைத் துவைத்துச் சுத்தமாக்கி உடுத்தாமல் களைந்த ஆடையையே யுடுத்தினார்களென்று அறிகின்றோம். தெய்வயானை தான் பார்ப்பனக் குலத்திலுதித்தவளென்று உயர்த்திப் பெருமையாய்ப் பேசுகிறாள். இவ்வளவு பெருமைகொண்ட அவள் க்ஷத்திரிய குலத்திலுள்ள அரசனைக் கலியாணம் செய்யவேண்டியதென்ன? சிலர், கஜனிட்ட சாபத்தால் நேர்ந்ததென மறுக்கலாம். ஆனால் தான் அரசனுக்கு மனைவியாவது தெரிந்திருந்தும் அவ்வளவு கருவங்கொள்ள வேண்டியதென்ன? சன்மிஷ்டையும் அவள் தாதிகளும் பாழுங்கிணற்றில் தெய்வயானையை வீழ்த்தினார்கள். தெய்வயானையின தாதிகளும் ஸ்நானஞ்செய்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், தெய்வயானையைக்கிணற்றில் வீழ்த்திய சமயம் இவர்கள் எங்குற்றார்களென்ற விவரங் காணப்படவில்லை. ஆனால், காட்டில் தவஞ்செய்யக்கூடிய இடத்தில் தெய்வயானைக்குத் தோழியர்கள் இருந்திருப்பார்களா என அறிஞர் சிந்திப்பாராக. கஜனைச் சபித்த இவள், சன்மிஷ்டையைச் சபிக்காமற்போன காரணமென்ன? யயாதி மகாராஜன் வந்து கைப்பிடித்துக் கரையேற்றுகின்றான். பார்ப்பனியாகிய தெய்வயானைக்கு ராஜனுடைய கையைப் பற்றிக் கரையேறுவது லச்சை இல்லைபோலும். தன் தகப்பனுருக்குத் தெரிவிக்கச் செய்து அவரால் கரையேறலாமன்றோ? மானங்கெட்டு வாழ்வதைவிட உயிரை விடுவது நலமெனப் பலர் கூறுவர். தெய்வயானை தனது தகப்பனுருக்கு சாரதி மூலமாய் அறிவிக்கிறாள். குருவாகிய சுக்கிராச்சாரி, மூன்று லோகத்தையும தனது ஞான திருஷ்டியால் நோக்கக்கூடியவரா யிருந்தும், தன மகளுக்கேற்பட்ட ஆபத்தை அறியமுடியவில்லையானால் அவ-

ரின் தவநிலே இருந்தவரென்னே? சுக்கிராச்சாரி உடன் வந்து சமாதானம் கூறுகிறர். தெய்வயானே அரச சபைக்குச் செல்லக்கூடாதெனச் சொல்லுகின்றுள். அவ ரும் அவ்வாறே இருந்துவிட்டார். சன்மிஷ்டை செய்த செய்கைக்கு அவள் தகப்பன் என் செய்வார்? இதற்காக குரு ராஜசபைக்குச் செல்லாதிருப்பது நியாயமாகுமா? இவர் அறிவாளியாயிருந்தும், மகள் சொல்லுக்குச் செவி சாய்த்ததென்ன? அரசன் குரு எங்கிருக்கிறரென்று பார்த்து வந்து சொல்லும்படி உத்திரவிட்ட பிறகு தான் சாரதி நடந்த வற்றைச் சொல்லுகிறன். சன்மிஷ்டை செய்த காரியங்கள் தெரிந்திருந்தும் சாரதி 2 நாளாக அரசனுக்கு அறிவிக்க வில்லே. இவனுடைய வஞ்சகச் செயல்தானென்னே! அரசன் குருவைப் பிரார்த்திக்க, அவர் மகளிடம் பிரார்த்திக்கும்படி சைகை செய்கிறர். அரசன் தெய்வயானேயைப் பிரார்த்திக்கிறன். ஆனல் அவள் அதற்கு இணங்காமல் அரசன் மகளேத் தனக்குத் தாதியாயிருக்கும்படி வேண்டுகிறுள். குருவாகிய சுக்கி ராச்சாரியும் இவ்விழி செயலுக்கு உடன்படுகிறர். இவ ரின் அறிவுதானென்ன! அரசன் தனது மகளேத் தெய்வ யானேக்குத் தோழியாய் இருக்கும்படி ஆக்ஞாபிக்கிறர். சன்மிஷ்டை அதற்கு ஒப்புக்கொண்டது போற்றற்குரி யதே. யயாதி மகாராஜன் பூஞ்சோலேயில் வந்தவுடன் தன் எண்ணமெல்லாம் வெளியிட்டு மணஞ்செய்துகொள் ளச் சொல்லுகிறுள். இவ்வாரிய குமாரத்தியின் இழி செயல்தானென்னே! தெய்வயானே அரசனிடம் தன்னே மணம்புரிய வேண்டுமென்று சொல்லுகிறுள். இவளுக்கு வெட்கமில்லே போலும்! முற்காலத்திலும் இவ்வாரிய குமாரத்தி சரியான யவ்வன வயதில் காதல்

கலப்பு மணஞ் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இக் கால ஆரிய மக்களும், பிராமண விதவைச் சிறுமிகள் காதல் கலப்பு மணஞ் செய்வதைக் கண்டு வியப்புறுது கஜன் தெய்வயானைக்கு இட்ட சாபத்தைப் போல் யாரிட்ட சாபமோவென நினைத்துக் கடவுள் செயலென இருப்பதற்கு ஓர் நல்ல வழியாகும்.

யயாதி மகாராஜனுக்கும் தெய்வயானைக்கும் கலியாணம் நடந்தது. சுக்கிராச்சாரி தன் மகள் பார்ப்பனி என்றும், அதனால் அவளைத் தவிர யாரிடமும் சம்போகம் செய்யக்கூடாதென்றும், அவ்வாறு செய்தால் கெடுதி வருமென்றும் அரசனுக்குக் கூறுகிறார். யயாதி மகாராஜன் சன்மிஷ்டையுடன் கூடியதினால் யாதொரு கெடுதியும் வந்ததாகவில்லை. தெய்வயானையும் அரசனும் பள்ளியறையில் படுத்திருக்கும்பொழுது அரசன் அந்தப்புறச் சோலையில் உலாத்தப் போகிறான். அதே சமயம் சன்மிஷ்டையும் அரசனிடம் வந்து தன் காமத்தைத் தணிக்க வேண்டுகிறாள். சன்மிஷ்டைஎவ்வளவு நாட்கள்தான் புருஷனில்லாமலிருப்பாள் ? பாவம் ! உலகத்தில் மக்கள் பிறந்ததே இன்பம் அனுபவிக்க; இன்பங்கள் எல்லாவற்றிலும் பெரியது காதல் இன்பம். அதை அனுபவிக்கவொட்டாமல் கட்டுப்படுத்தினால் அதைவிடக் கொடுஞ் செயல் ஒன்றுமில்லை. அவ்விதம் கட்டுப்படுத்தினால் ரகசியமாய் இன்பம் அனுபவிக்க முற்படுவர். அதனால் விபச்சாரமேற்படும். இவ்விதக்கொடுஞ் செயலுக்கு ஆளாக்கிய சுக்கிராச்சாரி, தெய்வயானை, சன்மிஷ்டையின் பெற்றோர் முதலியவர்களின் அறிவை அறிஞர் சிந்திப்பார்களாக. அரசன் குரு சொல்லிய நியாயங்களால் தடுக்கிறான். சன்மிஷ்டை ஒரு

வரந்தரும்படி வேண்டுகிறாள். இவ்வித சமயத்தில் அவள் கேட்கக்கூடிய வரம் யாதாயிருக்கலாமென அரசன் சிந்திக்காமற்போனதென்ன! பிள்ளை வரம் கேட்க, சன்மிஷ்டையோடு யயாதி மகாராஜன் கூடுகிறான். அரசன் இது விஷயங்களைத் தனது மனைவிக்குத் தெரியாமல் செய்வது எவ்வளவு வஞ்சகம்? இது விஷயத்தைத் தன் மனைவிக்கு அறிவித்திருந்தால் அவள் அது விஷயமாய்ச் சமாதானப்படவும் கூடும். அதல்லாமல் கள்ளப்புணர்ச்சி நடத்துகின்றான். இவனுடைய கேவல நடத்தையால் பின் வரும் கஷ்டங்களை விவரிப்போம்.

ஐந்தாம் அத்தியாயம்.

சன்மிஷ்டை கற்பவதியாகி ஒரு புத்திரனைப் பெற்றாள். இதைக்கண்ட தெய்வயானை புத்திரனை எவ்விதமாய் அடைந்தாயென சன்மிஷ்டையை வினவுகிறாள். சன்மிஷ்டை தெய்வயானையைப் பார்த்து "நான் ஒரு நாள் இரவு உப்பரிகையில் நின்றேன். ஒரு முனிவர் அங்கு தோன்றினார் நான் ஒரு புத்திரன் வேண்டுமென்பதாகக் கேட்டேன். அவர் திருநீறு கொடுத்தார். அதை உட்கொண்டு கற்பவதியாகி ஒரு புத்திரனைப் பெற்றேன்" எனக்கூறினாள். தெய்வயானை சரியெனப் போய்விட்டாள். அரசனுக்குச் சன்மிஷ்டை, மேலே கூறியவற்றைச் சொன்னாள். அரசன் சந்தோஷமடைந்து தனது மனைவிக்குத் தெரியாமலே சுகித்துவந்தான். அவள் மறுபடியும் ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்

போதும் தெய்வயானைக்கு முனி கிருபையால் பிள்ளை கிடைத்ததென்று கூறினள். மறுபடியும் அரசனைச்சேர்ந்து மூன்றாவது புத்திரனைப் பெற்றாள். அப்போதும் தெய்வயானைக்கு அவ்வாறே சொன்னாள்.

ஒரு நாள் சன்மிஷ்டையின் புத்திரர்கள் தெருவில் விளையாடுவதைக் கண்ட தெய்வயானை அவர்கள் அரசனின் ஜாடையாய் இருக்கக்கண்டு, அப்புத்திரர்களை அழைத்து உங்கள் பிதா யாரென்று கேட்க, அவர்கள் இதோ இருக்கிற அரசன் எங்கள் பிதாவெனக் கூறினர். தெய்வயானை தன் பிதாவாகிய சுக்கிராச்சாரியாரிடம் இதைத்தெரிவிக்க, அவர் அரசனிடம் வந்து "நீ இன்று முதல் வார்த்திப திசையை அடைவதுமன்றி இருமல் முதலான வியாதியினால் தொந்தரையும் அடைவாய்" எனச் சபித்தார்.

அரசன் முன் நடந்த விர்த்தாந்தத்தைச் சொல்ல, சுக்கிராச்சாரி கோபந்தணிந்து "உன் புத்திரர்கள் யௌவன திசையடைகிற பரியந்தம் நானிட்ட சாபத்தை அனுபவியும். அதன்பின்பு உன் புத்திரர்களில் ஒருவனுக்கு உன் வார்த்திப திசையைக் கொடுத்து உமக்கு இஷ்டமானவைகளை அனுபவித்து, மறுபடியும் எந்தப் புத்திரனிடத்தில் உமது வார்த்திப திசையைக் கொடுத்தீரோ, அவனுக்கே அந்த யௌவன திசையையும், அரசையும் கொடுத்துவிட்டு வார்த்திப திசையோடு காட்டில் தவஞ்செய்து பரமபதஞ் சேரும்" என்று மறு சாபங் கொடுத்துச் சென்றார். அன்றுமுதல் அரசன் அச்சாபப்படியானான்.

சில நாட்கள் சென்றபின்பு தெய்வயானை புத்திரரிருவரும், சன்மிஷ்டை புத்திரர் மூவரும் யௌவன திசை அடைந்தார்கள். அரசன் தன் புத்திரர் ஐவரையும் தனக்கு யௌவன திசை அளிக்கும்படி வேண்ட சன்மிஷ்டையின் சிரேஷ்ட புதல்வன் பூரு தவிர மற்றவர்கள் மறுத்து விட்டார்கள். யயாதி தெய்வயானையின் புத்திரரிருவருக்கும் நீங்கள் கிராதராகி அரசிழந்து வேடராவீர்கள்" என்றும், சன்மிஷ்டையின் கனிஷ்ட புதல்வரிருவருக்கும் "ஒருவன் மதுவிற்கிறைவனாகவும், ஒருவன் மச்சத்திற்கிறைவனாகவும் போகக் கடவீர்கள்" என்றும் சாபமிட்டுத் தன் வார்த்திப திசையைப் பூருவுக்குக் கொடுத்து, தான் அவனது வாலிப திசையை வாங்கிக்கொண்டு சில காலம் இன்பம் அநுபவித்தான். மறுபடியும் தான் வார்த்திப திசையை ஏற்று, பூருவுக்கு வாலிப திசையையும் தன்னரசையும் கொடுத்துக் காட்டிற்குச் சென்று அனேக காலம் ஒற்றைக்காலில் நின்றும், அனேக காலம் ஜலத்தில் நின்றும், அனேக காலம் சலபானஞ் செய்யாமலும், கடுந்தவஞ் செய்தான். பிரமன் தவத்துக்கு வியந்து பிரசன்னமாகி வேண்டும் வரத்தைக் கேளென்றார். அரசன் தான் எந்த லோகம் செல்ல நினைக்கிறானோ அந்த லோகங்களுக்கெல்லாம் செல்லவும் அவ்விடங்களின் விநோதங்களை அறியவும் ஓர் விமானம் உதவ வேண்டுமென்று பிரார்த்திக்க, ஒரு விமானமும், இரண்டு வரமும் கொடுத்துப் பிரமன் தன்னிருப்பிடஞ்சென்றான். யயாதி அவ்விமானத்தின் உதவியால் சத்தியலோகம் முதலியவைகளைப் பார்வையிட்டு ஒரு நாள் தேவேந்திர லோகத்துக்குச் சென்றான்.

இந்திரன் அரசனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து தனக்கொப்பாக வைத்திருந்தான். சில நாட்கள் சென்றபின்பு இந்திரன் அரசனைச்சோதிக்கக் கருதி அவனைப் பார்த்து, "நீர் மனுஷ தேகியாயிருந்தும் உம்மைப் போல் தவத்தி லுயர்ந்தவர்கள் மூன்று லோகத்திலு மில்லை" என்று புகழ்ந்து சொல்ல யயாதி "தவத்திலென்போல் உயர்ந்தவர்களில்லை. அப்படியிருந்தால் ஒருவரைக் காண்பியும்" என்று சொல்ல இந்திரன் சினங்கொண்டு, "நீ உன்னையே புகழ்ந்தமையால் சொர்க்க லோக வாழ்வை விட்டுப் பூமியில் செல்" என்று கூற அரசன் இந்திரனை மிகவும் வேண்டிக்கொள்ள அதன் பேரில் "சொர்க்கத்துக்கும் பூமிக்கும் மத்தியிலிராநின்ற அந்தரலோகத்தில் விட்டு வாருங்கள்" என்று ஆக்ஞாபிக்க தூதர்கள் அவ்வாறே விட்டுப் போனார்கள்

யயாதி அந்தர லோகத்தின் விநோதங்களைப் பார்த்து வரும்பொழுது இருவரைக கண்டு அவர்கள் யாரென்றும், எவ்விதமாய் இவ்விடம் வந்தீர்களென்றும் கேட்க, அவ்விருவரும் நாங்கள் யயாதி மகாராஜனுடைய புத்திரியின் புத்திரர்கள் என்றும், ஆத்ம லாபத்தைக் கருதி தவஞ் செய்ய இந்த லோகங்கிடைத்ததென்றும் கூற, யயாதி மகாராஜன் நான்தான் உங்கள் பாட்டனாகிய யயாதியென்று சொல்லி அவர்களைத் தழுவி ஆதரித்தான். அவ்விருவரும் தாங்கள் இவ்வளவு காலமும் எங்குற்றீரென்று வினவ, அவர் நடந்தவற்றைக் கூறினார். அப்பேரன்மார்கள் தங்களுக்குத் தெரியாத பல விஷயங்களை யயாதியினிடமிருந்து கற்று அருமையான நன்முயற்சி செய்ய, இந்திரன் தனது தூதர்களால் அவ்விருவரையும் அழைக்க அவர்கள் தங்கள் மூதாதை இங்கிருக்க

காங்கள் வரமுடியாதென்று மறுக்க இந்திரன் மூவரை யும் சொர்க்க லோகத்துக்கழைத்துக்கொண்டான். அப்பால் வைசம்பாயனர் யயாதி முதல் துஷ்யந்தன் வம்ச பரம்பரை வரைசொல்லி அதன்பின் துஷ்யந்த மகாராஜன் சரித்திரஞ் சொல்லுகிறார்.

துஷ்யந்தன் கதை.

துஷ்யந்த மகாராஜனிடம் பிரஜைகள் வந்து தங்கள் பயிர் பச்சைகளை மிருகங்கள் அழிக்கின்றன என்று விண்ணப்பஞ்செய்ய அரசன் வேட்டைக்குப்போய் சகல மிருகங்களையும் கொன்றான். ஒரு மான் அரசனுக்குத் தென்பட, அதைத்துரத்திக்கொண்டு ஒரு பாலை நிலத்துக்கு வரவே மான் மறைந்தது. அரசனும் மந்திரியும் குளிர் காற்று வீசுகிறதற்கு நேராய்ப்போனார்கள். அங்கு கங்கை தோன்றியது. அதில் இருவரும் ஜலம் பருகிக்கொண்டு இருக்க, ஒரு வனம் தோன்றியது. அதைப்பார்க்கப் போகும்பொழுது சில முனிவர்களால் கண்ணுவரிஷி ஆசிரமமிருப்பதையறிந்து ஆங்கு அரசன் மட்டும் சென்றான். அங்கு ஓர் கன்னிகை இருக்கக் கண்டான். அவள் வருவது துஷ்யந்த மகாராஜனெனக் குறிப்பாலுணர்ந்து பொற் பீடத்திலிருக்கச்செய்து தான் மறைவில் நின்றாள். துஷ்யந்தன் கண்ணுவரிஷி எங்குற்றாரென்று வினவ, அக்கன்னிகை 'அரசே! இப்பொழுதுதான் சதானந்தர் வந்து அழைத்துச்சென்றார்; ஆயினும் இரண்டு மூன்று நாழிகையில் வந்து விடுவார்' என்று கூற அரசன் 'நீ யார்? இங்கிருக்கக்காரணமென்ன உன் பெயரென்ன'? என்று கேட்டான். அவள், நான்

கண்ணுவரின் புத்திரி; என்பெயர் சகுந்தலை என்றாள். அரசன் கண்ணுவருக்குப் புத்திரியான விருத்தாந்தத்தை விளங்க உரைக்கவேண்டுமென்று கேட்க, சகுந்தலை, பின்வருமாறு கூறுகிறாள்.

இமய மலைச்சாரலில் விசுவாமித்திரமுனி அகோர தவஞ்செய்தார். அத்தவத்தினலெழுந்த அக்கினி திரிலோகத்தையும் தகித்தது. அதனால் இந்திரன் தேவர்கள் ரிஷிகள் முதலியவர்களிடம் இதற்கென் செய்வது என்று கேட்க அவர்கள் "இவன் தவத்தையழிப்பதற்கு ஸ்திரிகளேயன்றி வேறொன்றினாலும் முடியாது" என்று சொல்ல உடனே இந்திரன் மேனகையையனுப்பினான். மேனகை விசுவாமித்திரன் தவஞ்செய்கிற இடத்தில் தென்றற் காற்று வாடையில் நின்றாள் மன்மதன் தனது பாணத்தால் அவனுக்குக் காமத்தையுண்டாக்கவே விசுவாமித்திர முனி தவத்தை விட்டு மேனகையிடம் தனது காமத்தைத் தணிக்கவேண்ட அவள் அவருடன் கூடினதினால் சகுந்தலையாகிய நான் பிறந்தேன். மேனகை தெய்வலோகப் பெண்ணாதலால் என்னை ஓரிடத்தில் வைத்து ப்போயினாள். விசுவாமித்திரமுனி முற்றுந் துறந்தவராதலால் தனக்கிசைந்தவிடஞ் சென்றார். அப்பால் என்னைச் சகுந்தலைப்பட்சிகள் காத்து வந்தன. நானழும் குரலோசையை அவ்வழி வந்த கண்ணுவரிஷி கேட்டு என்னை ஆசிரமத்துக்கு எடுத்து வந்து எனக்குச் சகுந்தலையென்று பெயரிட்டு வளர்த்து வந்தார். அதுமுதல் இங்கிருக்கிறேன். இதுதான் என் விருத்தாந்தம்" என்றாள்.

இவைகளைக்கேட்ட துஷ்யந்தன் தன்னைக்கூடுமாறு அவளைக்கேட்டான். சகுந்தலை கண்ணுவரிஷியின் உத்

24497

திரவின் பேரில் செய்ய வேண்டுமென்றார். துஷ்யந்தன் "உன்னை எப்படியும் ஒரு அரசனுக்கே மணஞ்செய்து கொடுப்பார். நானும் ஒரு அரசன். ஆகையால் அவர் சந்தோஷம் கொள்வாரேயன்றி வருத்தப்படார். என்று சொல்ல, அவள் "மணஞ் செய்யாமல் ஒரு பெண் ஒரு புருஷனைக்கூடினால் உலகத்தாரிகழ்வாரே யன்றிப்புகழார்" என்று சொல்ல, அரசன் காந்தர்வ மணத்தின் பெருமைகளை எடுத்துரைத்தான் அதன் பேரில் சகுந்தலை, "காமநோய் தீர்ந்தவுடன் உன்னைக்கண்டது யார்? என்று வேறொரு ஸ்திரீயை மணஞ்செய்தால் என் புத்திரனுக்கு அரசு கிடைக்காதே" என்று கூற, அரசன் நீயே என் மனைவி, உனது புத்திரனே என் பட்டத்துக்குரியவன்" என்று ஆகாயவாணியைச் சாட்சி வைத்து வாக்குறுதி செய்ய இருவருங்கூடிக்கலந்தனர். பின்பு அரசன் ஊரில் போய் அமைச்சரால் அழைப்பிக்கிறேனென்று சொல்லித் தன் நகரம் வந்து சேர்ந்தான்.

அப்பால் கண்ணுவரிஷி வந்தவுடன் சகுந்தலை நடந்தவற்றைக் கூறினாள். அவர் சந்தோஷமடைந்தார். பத்துமாதங்களானதும் சகுந்தலை ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரனுக்குப் பரதன என்று நாமமிட்டு ஐந்து வயது முதல் சகலமும் கற்பித்து அப்புத்திரனுக்குப் பன்னிரண்டாம் வயதில் சகுந்தலையையும் பரதனையும் துஷ்யந்த மகாராஜனிடம் தனது சிஷர்களின் துணையோடு கண்ணுவரிஷி அனுப்பினார். அச்சிஷர்கள் அத்தினபுரத்தில் கொண்டுவந்து விட்டுப்போனார்கள். அப்பால் சகுந்தலையும் பரதனும் அரச சபைக்குவர அரசன் சகுந்தலை என்று கண்டு தனது சபையிலிருக்கிறவர்களுக்கு மெய்ப்பிக்கவேண்டி அவளைப் பார்த்து "நீ யார்?

உன்னருகில் நிற்கிற பையன் யார்? இங்கு வரவேண்டிய தென்ன? என்று வினவினன். சகுந்தலை "நான் உமது மனைவி; என்னிருப்பிடம் கண்ணுவரிஷி ஆசிரமம்" என்று விடையளிக்க, அரசன் தான் கண்ணுவரிஷியின் ஆசிரமத்துக்கு வரவேயில்லை என்று மறுக்க, சகுந்தலை பலவிதமாய் நடந்தவற்றை நவின்றும் கேளாமல் போகவே, ஆகாயவாணி சாட்சி கூறி அவளையும் பரதனையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தது. அரசன் அவ்வாறே செய்தான். அப்பால் துஷ்யந்தனும் சகுந்தலையும் காட்டிற் சென்று தவஞ்செய்து பரமபதஞ் சேர்ந்தார்கள். பரதன் மனு சாஸ்திர விதி பிசகாமல் செங்கோல் செலுத்தினன். அதுமுதல் சந்திர வம்சத்துக்கு பரத வம்சமென்றும், அம்மரபின் அரசன் கதைக்குப் பாரதமென்றும் பெயருண்டாயிற்று. பரதன் முதல் சவ்வருணன் கதை வரை கூறி அப்பால் சவ்வருணன் சுருக்கக்கதையைக் கூறுகிறார். மேற்கூறிய வரலாறுகளை ஆராய்வோம்.

கதை ஆராய்ச்சி

சனமிஷ்டைக்குக் குழந்தை பிறந்ததை யறிந்த தெய்வயானை குழந்தை எவ்விதம் கிடைத்ததென்று வினவ, அவள் முனிவினுடைய கிருபையால் கிடைத்ததென்று கூறுகிறாள். இப்புராதன காலத்தில் விபசாரத்தினால் குழந்தை கிடைத்ததென்று சொல்லித் தப்பித்துக்கொள்ள லாமோ போலும்! சனமிஷ்டை மறுபடியும் இரண்டு புத்திரர்களைப் பெற்றவிடத்தும் முன் சொல்லியபடியே சொல்லுகிறாள். ஒரு தடவை பொய் கூறினால் நம்பியிருப்பாள். மூன்று தடவையும் பொய் கூறி தப்பித்துக்கொள்ள முடி

யுமா? தெய்வயானை சன்மிஷ்டையின் புத்திரர்களால் அவர்களின் தகப்பன் யயாதி என்று அறியவே, தன் தகப்பன் சுக்கிராச்சாரிக்கு அறிவிக்கிறாள். தெய்வயானை குரு புத்திரியாயிருந்தும், சிறந்த அறிவுள்ளவளாயிருந்தும், தனது தகப்பனாருக்கு அறிவித்தால் அதனால் புருஷனுக்குக் கேடுவருமென்றும், அக் கேட்டால் தனக்குத் தானே நஷ்டமென்றும், அவள் அறியாமற்போனதென்ன? குருவாவது தமது மருமகன் என்று பாராமல் சபிக்கிறார். அவரும் மிகுந்த தவ சிரேஷ்டராயிருக்க அதனால் தன் மகளுக்குத் தானே கெடுதியென்று கூர்ந்து பார்க்காமல் போனதென்ன? இவனின் அறிவற்ற தன்மையை என்னென்றியம்புவது? யயாதியின் வார்த்திப திசையை மக்கள் நால்வரும் ஒப்புக்கொள்ள மாட்டோமென்று கூற, அவர்களை அறிஞர் வெறுக்கக்கூடிய சாபத்தை அனுபவிக்கச் செய்கிறான். இவனுடைய இழி செயல் தானென்னே? யௌவன திசையுடையவர்கள் வார்த்திபதிசையை விரும்புவார்களா? தகப்பனே இன்பம் அனுபவிக்க ஆசைகொண்டால் அவன் மகன் விரும்புவது இயல்பேயன்றோ. சன்மிஷ்டையின் சிரேஷ்ட புதல்வன் ஒப்புக்கொள்ள, யயாதி அவனுக்கு வார்த்திபதிசையைக் கொடுத்து, தான் யௌவன திசையைப் பெற்றுக்கொள்கிறான். யௌவனமும் வார்த்திபமும் கொடுக்கல் வாங்கல் என்ற வியாபாரம்போல் கூறப்படுகிறது. என்னே விந்தை! சிலகாலம் சென்ற பின் வார்த்திபதிசையை யயாதி ஏற்று வாலிபதிசையைப் பூருவுக்குக் கொடுத்துவிடுகிறான்.

அப்புறம் யயாதி அநேக காலம் ஒற்றைக்காலில் நின்றும், அநேககாலம் ஜலத்தில் நின்றும், அநேக காலம் ஜலபானஞ் செய்யாமலும் தவஞ்செய்கிறான். இவ்வித

வலிமை எவ்வாறு கிடைக்கப்பட்டதோ? ஒரு நாள் கூட ஒற்றைக்காலில் நிற்கமுடியாத நிலைமையில் அநேக காலம் எவ்வாறு ஒற்றைக்காலில் நின்று தவஞ்செய்திருப்பான்? அநேக காலம் ஜலத்தில் நின்று தவஞ்செய்கிறான். சமீபத்தில் திருவிதாங்கூரில் நடைபெற்ற ஜெப உற்சவத்தில் ஜலத்தில் நின்று ஜெபம் செய்த பார்ப்பனர்களுள் சிலர் விண்ணுற்றனர் என்ற செய்தி பலரும் அறிவர். இவ்விதம் 4 அல்லது 5-மணி நேரம் ஜலத்தில் நின்று ஜபம் செய்தவர்களின் கதி இவ்வாறானால், அனேக காலம் ஜலத்தில் நின்று தவம் செய்த யயாதியினுடைய கதி என்னவாகும்? அனேக காலம் ஜலபானமில்லாமல் தவஞ் செய்கிறான். காங்கிரசில் அருந்தொண்டாற்றிப் பல தடவை சிறை சென்றவரும் அங்கேயே தனது உண்ணாவிரதத்தால் 63 நாட்களில் உயிரிழந்தவருமாகிய யதீந்திரநாத் தாஸ் அவர்கள் மரணத்தை அறிந்தவரெவரும் அனேக காலம் ஜலபானமில்லாமல் தவஞ்செய்ய முடியுமா? என்பதை சிந்திப்பாராக!

யயாதி பிரமனிடம் நினைத்த லோகஞ் செல்ல விமானங் கேட்கிறான். அவர் கொடுத்துச் சென்றார். யயாதி வார்த்திப திரையோடும் வியாதியோடும் தவத்திலிருந்தான் என்பதாக முன்னமே கண்டோம். அப்படியிருக்க அதை பிரம்மனாவது நீக்கினதாகக் காணப்படவில்லை, அவ்வித தேகத்தோடு தான் சகல லோகங்களுக்கும் எப்படிச் சென்றிருப்பான் என யோசிக்க வேண்டியிருக்கிறது. பிரமன் விமானம் கொடுக்கிறான். நாகரீக காலத்தில் மேனாட்டார் சந்திர மண்டலத்துக்கும், சுக்கிர மண்டலத்துக்கும் ஆகாய விமானத்தின் உதவியால்போக முயற்சி செய்து வெற்றியடைய, நம் இந்திய

மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ஒரு சமயம் பிரமனாலே விமானம் கொடுக்கப்பட்டு சகல லோகங்களுக்கும் செல்லலாமென்ற வைதீகக் கொள்கையினால் பேசாமல் இருக்கலாம் போலும்! அல்லது எங்கள் மூதாதைகள் வெற்றியடைந்தார்கள் என்று புராணங்களில் எழுதப்பட்டிருக்கிறதென பெருமை பேசிக்கொள்வார்கள் போலும். இந்திரன் யயாதியைச் சோதித்து அவனை அந்தர லோகத்துக்கு அனுப்புகிறான். இவனுடைய வஞ்சகச் செயல் தானென்னவோ? மற்றவர்கள் வாழ இவனுக்கு மனம் பொறுக்கவில்லைபோலும். இனிமேல் துஷ்யந்தன் கதையைக் கவனிப்போம்.

இமயமலைச் சாரலில் விசுவாமித்திரன் அகோரமான தவஞ்செய்ததினால், அத்திபாக்னி மூன்று லோகத்தையும் தகித்தது. தவத்தினாலுண்டான அக்கினி மூன்று லோகத்தையும் தகிக்கச்செய்யுமா? இக்காலத்தில் இவ்வாறு யாராவது செய்து வல்லமை பெற முடியுமா? இவ்விதமான வேதங்களை நம்பிய ஆரியப் பார்ப்பனர்கள் தவஞ்செய்து "வேதங்கள் பொசுக்கப்பட வேண்டும்" என்று கூறுகிற சுயமரியாதை அன்பர்களைத் தகிக்க முடியுமா? என்று கேட்கின்றோம். இந்திரன் விசுவாமித்திரனுடைய தவத்தையழிப்பதற்கு மேனகையையனுப்புகிறான். எப்பொழுதுமே இந்திரன் மற்றவர்களை வஞ்சகத்தால் கெடுக்க நினைக்கிறான் இந்திரனிடம் முப்பத்து முக்கோடி தேவர்களிருக்க, விசுவாமித்திரனாகிய ஒற்றைத்தபசியை நேரில் எதிர்த்து அவனுடைய தவத்தையழித்து வெற்றி பெறாமல் ஸ்திரீயை அனுப்பித்தவத்தைக் கெடுக்கிறான். இது பேடிசெய்யக்கூடிய செய்கையேயல்லாது பலசாலி செய்யக்கூடிய செயலல்ல. மன்மதன்

தனது பாணத்தால் விசுவாமித்திரனுக்குக் காமக்குரோ தத்தை யுண்டாக்குகிறான். மதனென்ற ஆணும் ரதி என்ற பெண்ணுந்தான் காமத்துக்குக் காரணரென்று கூறுவது எவ்வளவு அறியாமை! ஆணும் பெண்ணும் சேர்ந்து இன்பம் அனுபவிக்கிற செய்கைக்கு ஒரு பெயர் கொடுத்து அதை யுண்டெனக் காவியங்களிலெழுதி மக் களுக்குள் புகுத்தி நம்பச்செய்து எந்நாளும் புராணத் துக்கு அடிமையாய் இருக்கச்செய்த ஆரிய மக்களின் கொடுஞ்செய்கைக்கு யார் தான் வருந்தாமலிரார்? அம் மட்டோ! மன்மதன் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்ற சண்டைகள் வேறு.

சகுந்தலைப்பட்சிகள் சகுந்தலையைக் காத்து வந்தன. பட்சிகள் குழந்தையைப் பாதுகாத்தது என்று கூறப்படுவது இயற்கைக்கு மாறாகவும், அறிவுக் குப் பொருந்தாததாயுமிருக்கிறது. துஷ்யந்தன் சகுந்த லையைத் தன் மனைவியல்லவென்று மறுக்கிறான். பன்னி ரண்டு வருஷமாய் சகுந்தலையை அழைக்காமலிருந்தது எவ்வளவு அறிவீனம்! தன் மனைவியல்லவென்று சொல் வது புல்லர் செய்யக்கூடிய செய்கையேயல்லது அறிஞர் செய்யக்கூடிய செயலல்ல. ஆகாயவாணி வந்து சாட்சி கூறுகிறாள். இக்காலத்திலும் இவள் வந்து உண்மையை வெளியாக்கினால் இந்து மதத்தின் தத்துவம் விளங்கா மற்போகாது. பலரும் இந்து மதத்தை எள்ளி நகையா டார்.

ஆருவது அத்தியாயம்.

சந்தனுவின் கதை.

சவ்வருணன் அரசு செலுத்திய காலத்தில், ஒரு நாள் காட்டில் வேட்டையாடித்திரும்பும்பொழுது, சூரிய குமாரத்தியாகிய தபதியைக் கண்டு அவள்மீது காதல் கொள்ள அவள் தன் தகப்பனிடம் கேட்டு மணஞ் செய்யும்படி சொல்லி மறைந்தாள். சவ்வருணன் சூரியனைக் கண்டு கேட்பதெப்படி என்று ஏக்கமுற்றிருந்தான். அதை சூரிய குல குருவாகிய வசிஷ்டர் தனது ஞான திருஷ்டியினல் உணர்ந்து, கணப்பொழுதுக்கு லட்சத் திருபத்தையாயிர யோசனை தூரம் சப்தமா பூட்டிய ரதத்திற் செல்லுகின்ற சூரியனை வந்து கண்டு, தபதியை சவ்வருணனுக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். சூரியன் அவரைப் பார்த்து "நான் செய்யும் தொழில் தங்களுக்குத் தெரியுமே. எனக்கு வரமுடியாது. தாங்களே என புத்திரியை அழைத்துக்கொண்டு போய் சவ்வருணனுக்குக் கலியாணம் செய்து வையுங்கள் என்று கூறிச் சென்ருர். வசிஷ்டர் அவ்வாறே செய்து தன் ஆசிரமத்துக்கு எழுந்தருளினுர்.

சவ்வருணன் தபதியுடனே கூடி ஒரு புத்திரனைப் பெற்று அவன் குருவால் கிடைத்தபடியால், அவனுக்குக் குரு என்று பெயரிட்டான். அதுமுதல் சந்திரகுலத்துக்குக் குருகுலம் எனப் பெயருண்டாயிற்று. குரு சுவாலையை மணந்து பரிட்சித்தென்ற ஒரு புத்திரனைப் பெற்ருன் குரு யாகம் செய்த இடத்துக்குக் குரு க்ஷேத்திரம் எனப்பெயருண்டாயிற்று. பரிட்சித்து சுபத்ரையை மணந்து பிரத்தீபனென்ற ஒரு புத்திரனைப் பெற்

ளுன். பிரத்தீபன் வீமராஜன் புத்திரியாகிய சுநந்தையைக் கூடி தேவாபி, சந்தனு என்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்ருன். தேவாபி காட்டிற் சென்று தவஞ் செய்து கொண்டிருந்தான். சந்தனு மகுடாபிஷேஞகி அரசு செலுத்திய சருக்கக் கதையைக் கீழே கூறுவோம்.

சந்தனு மகாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடிக் கங்கைக் கரையில் ஜலமருந்தச் செல்லும்பொழுது அங்கு ஒரு பெண்ணைக் கண்டு மையல் கொண்டு அவள் யாரென்று கேட்க, அவள், தான் பிரமன் சாபத்தால் இங்கு வந்தேனென்று சொன்ஞள். தன் காம ஆசையினுல் அரசன அவள் வரலாற்றைக் கேட்காமல் அவளைத் தனக்கு மனைவி யாகும்படி கேட்க கங்காதேவி "இப்போதுரைத்த கருத்தின்படி நடக்கிறேன். ஆனுல் என் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளைக் கொலைசெய்து போடுவேன். அவ்வுறுதிக்கு என்று பங்கம் வருமோ அன்றே ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லை. அப்படிக்கு மனமிருந்தால் கைகோடும்" என்று வேண்ட அரசன் அதற்குச் சம்மதித்துக் கைகொடுத்து அவளை நகரத்துக்குக் கொண்டுவந்து மணஞ்செய்து கொண்டான். அவள் ஏழு புத்திரர்களைப் பெற்றுக் கொலைசெய்து விட்டாள். ஆனுல் எட்டாவது புத்திரன் பிறந்தவுடன் அரசன் வந்து பிள்ளையை எடுத்துக்கொண்டு "பிள்ளை பிச்சை கொடு" வென்று வேண்ட, கங்காதேவி அரசனைப் பார்த்து "அரசனே! நீ கூறிய உறுதியை மறந்து என் விரதத்துக்குப் பங்கம் விளைத்தபடியால் இன்று முதல் எனக்கும் உனக்கும் சம்பந்த மில்லை" என்று சொன்ஞள். அரசன் அவளைப் பலவிதமாய் வேண்ட பின்வரும் சாபவரலாற்றைக் கூறிஞள்.

முன்னம் சத்தியலோகத்தில் பிரமன் சபையில் கங்கை சென்றாள். அங்கு காற்றினால் அவள் வஸ்திரம் விலகிற்று. அதனால் கங்கையின் அவயவந்தோன்றிற்று சபையிலுள்ள யாவரும் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். ஆனால் வருணன் மாத்திரம் கங்கையின் அவயவத்தைப் பார்த்தான். பிரமன் அதையறிந்து, நீ பூலோகத்தில் சந்திரவமிச அரசனாகப்பிறந்து நீ காதல் கொண்ட கங்கையை மணந்து சில புத்திரரைப்பெற்று சிலகாலமிருந்து உன் பீடத்தைச் சேரக்கடவை என்று சபித்தார் கங்கையைப் பிரமன் பார்த்து, "உன் அவயவம் தோன்றினபடியால் நீயும் பூலோகத்துக்கு மங்கைப் பருவத்தோடு சென்று சந்திரவமிச ராஜனைக்கூடி சில புத்திரரைப்பெற்று முன்போல நதியுருவாயிரு என்று சாற்றினான். அச்சாபப்படி நீ தான் வருணன், நான் தான் கங்கை என்று சொன்னாள். சந்தனு பிள்ளைகளைக்கொன்ற வரலாறு என்னவென்று கேட்க, கங்கை பின்வருமாறு கூறுகிறாள்.

முன்னம் வசிஷ்டரை தரிசிக்கத் தேவர்களெல்லாம் சென்றார்கள். அம்முனி காமதேனுவால் அவர்களுக்கு விருந்து செய்தார். அவ்விருந்துக்கு அஷ்டவசுக்களும் சென்றிருந்தார்கள். அஷ்டவசுக்களில் ஒருவனாகிய பிரபாசன் வசிஷ்டர் காமதேனுவால் விருந்து செய்ததைத் தன் மனைவிக்குச்சொல்ல அவள் காமதேனுவைக் கொண்டு வரும்படி கேட்க, பிரபாசன் தன் மனைவியின் மேலுள்ள காதலினால் மறுக்க முடியாமல், சரியென மற்றெழுவரையும் கூட்டிக்கொண்டுபோய் காமதேனுவைப் பிடித்துக்கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தான். வசிஷ்டருக்கு மற்ற முனிவரால் அறிவிக்கப்பட்டு, அவர்

காமதேனுவைக் காணாமல் ஞானதிருஷ்டியால் அறிந்து ஒரு மந்திரத்தை உச்சரித்தார். உடனே அஷ்டவசுக்களாகிய எட்டுப்பேரையும் வசிஷ்ட முனியின் முன்னால் மந்திர தேவதைகள் இழுத்துக்கொண்டுபோய்விட, வசிஷ்டர் அவர்களைப்பார்த்து

"நீங்கள் பூலோகத்தில் மானிட யோனியிற் போய்ப் பிறவுங்கள்" என்று சபிக்க, பிரபாசன் தவிர மற்றெழுவரும் தாங்கள் காமதேனுவைக் கொண்டுபோகக் காரணரல்லவென்று பணிய, வசிஷ்டர் "நீங்கள் எழுவரும் அதிகமாய்ச் சம்பந்தப்படாததால் நீங்கள் மானிட யோனியிற் பிறந்தாலும், உடனே கங்கையிலெறியப்பட்டு பழைய தேவரூபங் கொள்வீர்கள் ஆனால் அதிகமாய்ச் சம்பந்தப்பட்ட பிரபாசன் மானிட யோனியிற் பிறந்து, 886-வயது வரைக்கும் பூலோகத்தில் மனைவியில்லாதிருக்கக்கடவன்" என்று சாபம் கொடுத்தார். அதன்படி அவர்கள் எழுவரும் கங்கை வயிற்றிற் பிறந்து இறந்தார்கள். இப்புத்திரன் 886-வயது வரை இருந்து சந்திரகுல மூதாதையாய் விளங்குவான்.

அரசன், இப்புத்திரனால் என் குலம் விருத்தியாகாதபடியால், இருவருங் கூடி இன்னுமொரு புத்திரனைப்பெற்றுவைத்துப் போவென்று வேண்ட, அவள் "நீர் இன்னுமொரு மனைவியை அடைந்து அதனால் உமது குலத்தை விர்த்தியாக்கும். இப்புத்திரனைப் பதினாறு வயதுவரைக்கும் வளர்த்து உமக்குக்கொடுக்கிறேன் அல்லது கங்கையருகில் வந்தால், அவ்விடத்தில் ஒப்புவிக்கிறேன்" என்று சொல்லி மாயமாய்ப் போனாள். அரசன் பதினாறு

வருஷமானதும், கங்கை நதிதீரத்தில் சென்று கங்கையை நினைத்து நிற்கவும், கங்கை புத்திரன் தோன்றி அரசன் மேல் மோகனாஸ்திரம் விடவும், அரசனுக்கு மோகம் தலைக்கேறி ஸ்மரணையற்று பூமியில் விழவே, கங்கை புத்திரன் தாயினிடம் சென்றான். கங்கை, மகன் முகக்குறிப்பையறிந்து வெளியே வந்து பார்த்து, அரசனுக்குச் சோகத்தை நீக்கி, இப்புத்திரனைத் தான் வளர்த்தபடியால், காங்கேயன் என்று பெயரிடும்படியாயும், அவனுக்கு வசிஷ்டர் முன்னிலையில் கல்வியும், பரசுராமரிடம் வில் வித்தையும் கற்றுக்கொடுத்திருக்கிறேனென்று சொல்லிப் புத்திரனை ஒப்புவித்து மறைந்து போனாள். காங்கேயனுக்குச் சந்தனு இளவரசு பட்டத்துக்கு முடி சூட்டினான்.

அப்பால் சந்தனு ஒரு நாள் வேட்டையாடித் தாக விடாய்ப்பட்டு, யமுனை நதிக்குச் சென்று வரும்பொழுது சிறந்த பரிமள வாடை வீசிற்று. அரசன் அவ்வாடைக்கு நேரே ரதத்தை விடச்சொல்ல, அவ்விடத்தில் ஒரு பெண் இருக்கக்கண்டு அவள் யாரென்று வினவினான். அவள் தாசராஜன் புத்திரி என்று சொல்ல, அரசன் தாச ராஜனிடம் செல்ல, அவன் வணங்கினான். சாரதி, தாச ராஜனைப் பார்த்து "உமது புத்திரி பரிமளகந்தியை அரசனுக்குப் பாணிக்கிரகஞ் செய்துவையும்" என்று பகர்ந்தான். தாசராஜன் "எங்கள் இழிகுலத்துப் பெண்ணை மணஞ் செய்தால் அவன் புத்திரனுக்குப் பட்டங் கிடையாதே" என்று சொல்ல, அரசன் வருந்தி தன் நகரம் வந்து அவள் மேல் ஏக்கங்கொண்டிருந்தான். அதைக் கண்ட மந்திரிகள் காங்கேயனுக்குச் சொல்ல, காங்கேயன் அரசன் வேட்டைக்குச் செல்லும்பொழுது தேர் செலுத்

திய சாரதியை அழைத்துக் காரணமென்ன? என்று வினவ, சாரதி நடந்தவற்றை நவின்றான்.

காங்கேயன் தன்னைச்சகலரும் சூழ்ந்துவரச்சென்று, தாச ராஜனிடம் தன் தகப்பனுக்குப் பெண்ணைக்கொடுக் கும்படி கேட்டான். அவன் தன் புத்திரி பிள்ளைக்குப் பட்டங்கட்டுகிறதாயிருந்தால் கொடுக்கிறேன் என்று கூற, காங்கேயன் தாசராஜனைப்பார்த்து, "அரசனே! உமது புத்திரி மகனுக்குப் பட்டங் கொடுக்கிறேன். எனக்குப் பின் என் பிள்ளைகள் வழக்காடாமலிருக்கும்படி நான் ஒரு பெண்ணையும் மணப்பதில்லை; இது சத்தியம். சந் திர, சூரியர், முப்பத்து முக்கோடி தேவர்கள், ஆகாய வாணி முதலியவர்கள் சாக்ஷி" என்று சொல்ல, இந்தி ரன் முதலானவர்கள் அந்தரத்தில் நின்று, இவன் பட்டா பிஷேகத்தை நிராகரித்ததுமன்றி, மனைவியையும் பீஷ் மஞ் செய்தபடியால், இன்று முதல் பீஷ்மாச்சாரி என்று கூறி பல ஆசிகள் வழங்கிச் சென்றார்கள்

பீஷ்மர், தாசராஜன் மகளை அழைத்துக் கொண்டு வந்து, தகப்பனாரிடம் தெரிவிக்க, சந்தனு மந்திரியிடம் எவ்விதமாய்த் தாசராஜன் சம்மதித்தானென்று கேட்க நடந்தவற்றை நவின்றார். அரசன் பீஷ்மரைப்பார்த்து, "புத்திரசிகாமணியே! என் முன்னிலையில் புண்ணியலோ கத்துக்கேதுவாகிய மனைவியை நீக்கி நின்றபடியால் நான் இரண்டு வரங்கொடுக்கிறேன். அவை என்னவெனில் புண் ணிய லோகம் உனக்குக் கிடைக்கக்கடவது. நீ எப்பொ ழுது உயிர்விட நினைக்கிறாயோ, அப்பொழுது யமவாதை இல்லாமல் உயிர் நீங்கக்கடவது" என்று சொல்லி ஆசீர் வதிக்க, பீஷ்மர் சகல அரசர்களுக்கும் தூதனுப்பினார். சகல அரசர்களும் வந்து சேர்ந்தார்கள்.

தாச ராஜன் சகல அரசர்களுக்கும் பரிமளகந்தியினுடைய வரன்முறையைக் கூறி, அவள் சூரிய குல வசு ராஜன் புத்திரியென நிலைநாட்டினான். அப்பால் சந்தனு மகாராஜனுக்கும், பரிமளகந்திக்கும் கலியாணம் சிறப்பாய் நடந்தேறியது.

இவ்வரலாறுகளை ஆராய்வோம்.

சவ்வருணன் சூரிய குமாரியாகிய தபதிமேல் காதல் கொள்ளுகிறான். பூலோக அரசன் சூரிய குமாரியைக் காதல் கொள்ளுவது எவ்வளவு அறிவீனம்? அவளோ நிலைத்திரவுடலை மறையக்கூடிய சக்தி வாய்ந்தவள். வசிஷ்டர் சூரியன்முன் சென்று குமாரியைச் சவ்வருணனுக்குக் கொடுக்கும்படி கேட்கிறார். கணப்பொழுதுக்கு லட்சத்து இருபத்தையாயிர யோசனை தூரம் செல்லுகிற சூரியனை, வசிஷ்டர் எவ்வாறு தொடர்ந்து கண்டனரோ? சூரியனுடைய அக்கினி, அவரைத் தகிக்கவில்லை போலும்! சூரியன் சுற்றுவதாய்ச் சொல்லுவது எவ்வளவு பேதைமை! பூமிதான் சுற்றுவதாய்ப்பல மேற்கோள்களுடன் அறிஞர் நிலைநாட்டியிருக்கிறார்கள். சூரியன் தனனுடைய தொழிலைத் தனக்கு வரமுடியாது என்பதாகப் புகல்கிறார். சூரியனுக்குப் பிரியமுடியாத தொழிலிருக்க அவன் எவ்வாறு மகளைப் பெற முடிந்ததோ?

சந்தனு மகாராஜன் கங்கா தேவியை மணஞ் செய்ய விரும்புகிறான் அவள் தான்பெறும் குழந்தைகளைக் கொலை செய்வேன் என்பதாகக் கூறுகிறாள். அவ்விதக்கொடுஞ் செய்கையுடைய பஞ்சமா பாதகியை மணஞ் செய்வதை விட, உயிரை விடுவது நலமாயிருக்குமன்றோ? சந்தனு அதற்கு உடன்படுகின்றான் இவ்வித செய்கைக்குடன்படுகிற அரசனுடைய அறிவை அறிஞர் சிந்திப்பாராக. பிர

மன் சபையில் காற்றினால் கங்கையின் வஸ்திரம் விலகி அவள் அவயவந் தோன்ற, வருணனவற்றை நோக்கினான்! வருணனுடைய இழி செயலை என்னென்று கூறுவது? பிரமன் வருணனைச் சந்திர வம்ச அரசனாகப்பிறக்கக் கட்டளையிடுகிறார். கங்கையையும் மங்கையுருவாக பூலோகத்துக்குச் சென்று வருணனுடன் குடும்படி கூறுகிறார். கங்கைமேல் குற்றம் யாதொன்றுமில்லாதிருக்க, அவளைச் சபித்த பிரமனுடைய புத்தியை என்னென்று கூறுவது? கங்கையின் வஸ்திரம் விலகக் காற்று காரணம்; அக்காற்றுக்கு அதிபதி வாயு தேவன். வாயு தேவன்தான் இவ்விதக் குற்றம் செய்தவன். ஆகவே அவனுக்குத் தண்டனைக் கிடைக்கவில்லை. கங்கையை வான நதி என்று கூறப்படுகிறது. கங்கை பூலோகத்துக்கு வந்ததினால், வானுலகத்தில் நதி தடைபட்டிருக்கவேண்டுமன்றோ? மேலும், நதியைப் பெண்ணாகக் கூறுவதியற்கைக்கு மாறுபடுகிறது. கங்கையே பூர்வ வரலாறு கூறுகிறாள். சந்தனுவே வருண தேவனாயிருந்திருக்க, அவனுக்குப் பூர்வ வரலாறு தெரியாமற் போனதென்ன? வசிஷ்டர் காமதேனுவால் விருந்திடுகிறார்? பசுவானது பால் கொடுக்குமேயன்றி, சகல ஆகாரங்களையும் கொடுக்கவல்லது என்பது அறிவுக்குப் பொருந்துமாறு இல்லை. இவ்விதப் பசுவை நம் பாமர மக்களுக்குக் கொடுத்தால், அவர்கள் சுகமே வேலையின்றிச் சோமபேறியாய்த் திரிந்து காலங் கழிக்கலாமன்றோ? இவ்வித அற்புதத்தை பிரபாசன் தன் மனைவிக்குக் கூற, அவள் அதை வேண்டுமென்றாள். இயற்கைக்குமாறான ஆச்சரியபடக்கூடிய வஸ்துவை விரும்புவது இயல்பேயன்றோ? அஷ்டவசுக்கள் காமதேனுவைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். காமதேனு

மிகவும் பலமுள்ளதாயிருக்க அதை அஷ்டவசுக்கள் பிடித்தார்களென்பது ஒப்பத்தகுந்ததல்ல.

காமதேனுவைப் பிடித்த விஸ்வாமித்திரனுடைய சேனைகளை அழித்துக்கொன்ற வேறு பல கதைகளுண்டு. அஷ்டவசுக்களை வசிஷ்டர் சபிக்கிறார். ஆனால் பிரபாசன் தவிர மற்றெழுவரும் தாங்கள் அதில் அதிகமாய்ச் சம்பந்தப்படவில்லை என்று சொல்ல அவர்களுக்கு லேசான சாபம் கொடுக்கிறார். பிரபாசனைத் தவிர மற்றவர்கள் இதில் அதிகமாய்ச்சம்பந்தப்படவில்லை என்று முன்னாலேயே தெரியாமற் போனதென்ன? இவருடைய ஞானதிருஷ்டியுமிவ்விதமாயிருக்கலாம் போலும்!

பிரபாசனைப் பூலோகத்தில் 886-வயதளவும் மனைவியில்லாதிருக்கக் கடவன் என்றார் வசிஷ்டர். மனைவியின்றி வாழ்வதும் ஒரு வாழ்வோ? அந்தோ பரிதாபம்! கங்கை, காங்கேயனை 16 வயதளவும் வளர்த்துத் தருவதாய் வாங்கிக்கொண்டு சென்றாள். கங்கையோ நதி உருவம். ஆனால் பெண் உருவமும் எடுக்கிறாள். ஆனால் ஒன்றெடுத்தால் ஒன்று மறையுமன்றோ? நதிக்கு எவ்வாறு புத்திரனை வளர்க்க முடியும்? பதினாறு வருஷமானதும் அரசன் கங்கைக் கரையை அடைய, கங்கா புத்திரன் தோன்றி, தன் தகப்பன்மேல் மோகானாஸ்திரந் தொடுத்தான். அவன் கங்கை தேவியினுடைய புத்திரனாயிருக்க, தன் தகப்பனென அறியாதது விந்தையே! மோகானாஸ்திரம் விட, அரசன் மோகமடைந்தான். காமத்துக்குக் காரணம் மன்மதனிருக்க, மோகானாஸ்திரத்தாலும் காமம் உண்டாகும்போலும்! சந்தனு பரிமளகந்தியைக் கண்டு காதலுற்றான்.

தனது புத்திரன் காங்கேயனுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய காலமாயிருக்க, தனக்கே மணஞ்செய்யவேண்டுமென்று நினைத்தால் அவ்வரசனுடைய புத்தியை என்னென்றியம்புவது? நாகரீக காலமாகிய இவ்விருபதாம் நூற்றாண்டில் கூட, இவ்விதமான கலியாணங்கள் நடப்பதைக் கண்ணாரக்காணலாம். காங்கேயன் தகப்பனுக்காக, தான் கலியாணஞ் செய்வதில்லையென்று சத்தியம் செய்கிறான். இவனுடைய அறிவுதானென்னே! பூலோகத்தில் மக்களாகப் பிறந்தவர்கள் அனுபவிக்கவேண்டிய பயனை அனுபவிக்காதவன், பிறந்தும் பிரயோஜனமற்றவனே யாவான்.

சந்தனு பீஷ்மருக்கு 2- வரங்கொடுக்கிறான. ஒன்று புண்ணியலோகம் கிடைப்பது; பீஷ்மனோ அஷ்டவசுக்களில் ஒருவன்; அவன் இறந்ததும் அஷ்டவசுக்களோடு செல்கிறவன். அவனுக்கு இவ்வரம் அவசியமல்ல. இரண்டாவது வரம், எமவாதை இல்லாமல் எப்பொழுது உயிர் விட நினைக்கிறானோ, அப்போது உயிர் நீங்கக்கடவது. முன்னமே கங்கை சந்தனுவுக்கு பீஷ்மர் 886-வயதளவும் இருப்பான் எனக்கூறியிருக்கிறான். அது சந்தனுவுக்குத் தெரிந்திருந்தும், நினைத்த சமயம் உயிர்நீங்கக்கடவதென்றார். ஆகவே கங்கை கூறியபடியாகுமா? இவர் வரத்தின்படியாகுமா? அரசன் வரத்தின்படி 88) வயதுக்கு முன்னாவது, பின்னாவது இறக்க வேண்டுமென்று நினைத்தால் பிரமனிட்ட சாஸ்திரம் பொய்யாகுமல்லவா? இது முன்னுக்குப்பின் முரண். இவ்வரமும் காங்கேயனுக்கு அவசியமில்லை. தாசராஜன், பரிமளகந்தியைச்சூரியகுல வசுராஜன் புத்திரி என்ற சரித்திரங்களைக்கூறினான். ஆனால் இங்கு ஒன்று அறிவுறுத்த வேண்டியதாகிறது

முதல்ாவது கட்டுரையில் பார்த்தபடி மச்சகந்தியைக் கன்னிப்பருவத்தில் பாராசர் புணர்ந்து வேதவியாசரைப் பெற்றாளென முன்னமே கண்டோம். இவள் முன்னமே பராசருக்கு மனைவியாகியிருக்க, இப்பொழுது சந்தனுவுக்கு இல்லாளாகிறாள். இவ்வித விபசார நிலைமையுடைய பரிமளகந்தியைச் சந்தனு மணஞ்செய்து கொள்கிறான். பரிமள கந்தியினுடைய கற்பு நிலைதானென்னே! அறிஞர்களுக்கோர் வேண்டுகோள்:—

மகாபாரதத்தின் கண்மலிந்துள்ள பல அநீதிகளும், பொய்யும், வஞ்சகமும் பார்ப்பனர் செய்துள்ள படுமோசங்களும், இன்னும் பலவிதக்கொடுஞ் செய்கைகளும் மக்கள் முன்னேற்றத்துக்குப் பெரிதும் தடை விளைவிப்பனவாயிருக்கின்றன. இவைகளை மக்களுக்கு ஆராய்ச்சி மூலம் எடுத்துக்காட்டி, சமூகக்கட்டுப்பாடுகளையுடைத்தெறிந்து சுயமரியாதையைக் கைக்கொண்டு, அவர்கள் முன்னேற்றமடையச்செய்யவேண்டுமென்பதே நமது நோக்கம். நாம், கடவுளே கிடையாது. எல்லாம் இயற்கை என்று கூறும் கட்சியைச்சார்ந்தவருமல்ல. புராணங்களில் கூறிய கடவுள்களை நம்பி, அதற்காக நமது ஆஸ்திகளைச்செலவு செய்து நம்மை வறுமை என்னும் படுகுழியில் வீழ்த்தும் தெய்வங்களை நான் நம்புகிறவனுமல்ல.

ஏழாவது அத்தியாயம்.

——)o(——

சந்தனு பரிமள கந்தியைக்கூடி, சித்திராங்கதன், சித்திர வீரியன் என்ற இரு புத்திரர்களைப் பெற்று மரண

மடைந்தான். சித்திராங்கதனாகிய அந்த லோக கந்தருவ அரசன், சித்திராங்கதனென்று தனது பெயரை ஒருவனை வைத்துக்கொண்டு பூமியில் அரசாட்சி செய்கிறதாயென்று அவன் தலையைக் கொண்டுபோனான். பீஷ்மன சித்திர வீரியனுக்கு முடி சூட்டினான். அப்பால் சித்திர வீரியனுக்குக் காசிராஜன் புத்திரிகளுக்கு நடந்த சுயம் வரம் மண்டபத்தில் அக்கன்னிகைகள் மாலையிடப்போனார்கள். "இவன் தாசராஜன் புத்திரி மகன். ஆகையால் இக்குலத்தரசனுக்கு மாலையிடுவது தகுதியா?" என்று மற்ற அரசர்கள் சொல்ல, பீஷ்மன் யுத்தத்துக்குத் தயாரானான். மற்ற அரசர்களும் யுத்தஞ்செய்யத் தயாராகி சண்டை நடந்ததில், பீஷ்மன் வெற்றி பெற்று அம்பா, அம்பிகை, அம்பாலிகை என்ற மூவரையும் அழைத்துக்கொண்டுவர, அம்பா, தான் சாளுவராஜன்மீது காதல் கொண்டிருப்பதாய்ப் பீஷ்மனுக்கு அறிவிக்க, அவன் அவளை சாளுவ ராஜனிடம் அனுப்பிவிட்டு, மற்ற இரு பெண்களையும் சித்திரவீரியனுக்கு மணமுடித்தான். அம்பாவை சாளுவராஜன் வேண்டாமென்று வெறுத்துத் தள்ள. அவள் மறுபடியும் பீஷ்மனிடம் வந்து, தன்னை இருவரில் யாராவது ஒருவர் மணஞ்செய்து கொள்ளுங்களென்று வேண்ட, பீஷ்மன் மறுத்துவிட்டான். அதன் பேரில் அவள் பரசுராமனிடம் சென்று, தன்னை பீஷ்மன் கலியாணம் செய்யும்படியாய் ஏற்பாடு செய்யவேண்டியது என்று நடந்தவற்றை நவில, அவன் சரியென அவளைக் கூட்டிக்கொண்டு, பீஷ்மனிடம் சென்று, அவளைக் கலியாணம் செய்யும்படி வேண்ட, அவன் தான் சத்தியம் செய்திருப்பதை அறிவித்து, முடியாதென்றான். இருவரும் போர் செய்ய, பீஷ்மன் வெற்றி பெற்றான். பரசுராமன்

இனி அரசர்களுக்கு வில்வித்தைக் கற்றுக்கொடுப்பது இல்லையென்று சபதஞ் செய்து சென்றான்.

அம்பா வருந்திக் காளியை நோக்கித் தவஞ் செய்ய, அவள் பிரசன்னமாகவே, பீஷ்மனைக்கொல்ல அம்பா வரங் கேட்க, காளி இந்த ஜென்மத்தில் அவனைக் கொல்லமுடியாது. "இந்த வடிவை நீக்கி யாகசேனனிடத்தில் அலியாய்ப் பிறந்து இரு; அப்பால் பாரதப்போர் வரும்; அதற்கு நீ செல்வாய்; அக்காலத்தில் உன்னால் பீஷ்மன் இறக்கப் போகிறான்." என்று சொல்லி மறைந்தாள். அப்பால் அம்பா தீக்குளி வளர்த்து அதில் விழுந்து இறந்து, யாகசேனனிடம் பிறந்து வளர்ந்து வருகிறாள். சித்திரவீரியன் அளவுக்குமிஞ்சி போகம் செய்து புத்திரரின்றிப் பெரு வியாதியடைந்து மரணமடைந்தான். பீஷ்மனும் பரிமளகந்தியும், சந்திர வமிசம் அற்றுப்போய் விட்டதென்று வருந்தி இருந்தார்கள்.

பரிமள கந்தி ஒருநாள் பீஷ்மனிடம் சென்று, "பீஷ்மா! அரசனுக்குப் புத்திரனில்லாவிட்டால் தரும சந்தானம் பெற்றுக்கொள்ளலாம். நீ இருக்கும்போது வருத்தப்படுவது தகுதியல்ல. நீ ஒரு பெண்ணை மணஞ் செய்யாவிட்டாலும், என் புத்திரனுடைய மனைவிகளைக் கூடி புத்திர சந்தானம் உண்டாக்கலாம" என்று கூற. பீஷ்மன்: "அம்மையே! என் தந்தையின மனக்குறை நீங்க, தேவர்களறிய மணம்புரியேனென்று சபதஞ் செய்திருக்கின்றேன். தரும சந்தானம் பெற்றுக்கொள்ளுகிறது என்றாயே அவ்விதம் செய்தால் எனக்கு மாத்திரமல்ல; என்னையொத்த அரசர்களுக்கும் சரிதான்" என்று சொல்லி தரும சந்தானம் பெற்றவர்களின் சரித்திரங்களைக்கூறுகிறான்.

"முன்னம் பலிச்சக்கரவர்த்தி தனக்குப்புத்திர சந்தானமில்லாதபடியால், அரசை மந்திரிகள் வசம் ஒப்புவித்து, தவஞ்செய்யக் காட்டிற்குச் செல்லும் வழியில், கங்கையை யடைந்தான். கங்கை நதியில் தெப்பத்தில் கட்டுண்டு செல்லுகிற தீர்க்கதம முனியைக் கண்டு, அவருக்குத்தன்னை இன்னாரென்று அறிவித்து, அவரைத் தெப்பத்திலிருந்து கட்டவிழ்த்து, அவரை வழிபாடு செய்து, தங்களுடைய வரலாறு என்னவென்று வினவ அவர் மகிழ்ந்து, அரசனை ஆசீர்வதித்து, தான் பிறந்தது முதல் தெப்பத்திலேறிக் கங்கையில் வந்தமட்டும் எடுத்தோதினார். அரசன் "சுவாமி! எனக்குப் புத்திரபாக்கியமில்லை; அதனால் காட்டிற் தவஞ்செய்ய வந்தேன்; தங்களைக்கண்டேன்; என் மனக்குறையை விண்டேன். தாங்கள் என் அரண்மனைக்கு எழுந்தருளி, என் மனைவியிடம் புத்திரனைப் பாலியும்" என்று வேண்ட, தீர்க்கதமன் சரியென்று அரண்மனைக்குச் சென்றான். பலிதன், மனைவியிடம் இது விஷயமாய்ச்சொல்ல, அவள் முதலில் ஐயங் கொண்டாள். அரசன் பல நீதிகள் சொல்லி அவளை ஒப்புக்கொள்ளச் செய்து, தீர்க்கதமனிடம் போய் "தாங்கள் இந்தப் பள்ளியறையிற் போய்ச் சேர்ந்திரும்" என்று சொல்லி, தன் மனைவியை எச்சரித்து, தான் ஒரு விடுதியிற் போய்ச்சயனித்தான். அரசன் மனைவி நாணமுற்று, ஒரு தாதியை அலங்கிருதஞ் செய்து அனுப்பத் தீர்க்கதமன் தனது ஞானக் கண்ணால் அறிந்து, அரசன் விருப்பப்படி நடப்போமென்று அவளைச் சேர்ந்தான். அத்தாதி அம்முனிவருடைய வீரிய விர்த்தியால் பதினொரு புத்திரர்களைப் பெற்றாள். அரசன் இதையறிந்து மறுபடியும் தன் மனைவிக்குப் பல நீதிகள் ஓதி, அவளை முனிவருடன் கூடும்படி சம்மதிக்கச் செய்து, முனிவரி

டம் வந்து, "இடம் பேசப்பட்டது. ஆகையால் எனது மனைவியுடன் சேர்ந்து புத்திரனைப் பாலியும்" என்று வேண்ட, அவர் சரியென்று அரசன் மனைவியுடன் கூட, ஒரு புத்திரன பிறந்தான். முனிவர் யோக மகிமையால் மறைந்தார். அப்புத்திரனுக்கு அங்க ராஜன் என்று பெயரிட்டு பட்டத்துக்குரியதாக்கிக் கொண்டான். நிற்க; சூரிய குலம் பரசுராமரால் நாசமடைந்தபொழுது, சூரிய வம்சத்து அரசிகள் அக்கினிப்பிரவேசம் செய்ய எத்தனித்தது கண்ட காசிபர், அவர்களுக்குச் சில நீதிகள் சொல்லி, அவரவர்களின் குருமார்களைக் கூடி, புத்திர சந்தானம் பெற்றுக்கொண்டார்கள். இதுவுமன்றி, கனமாட பரத மகாராஜன் தனது மனைவி மதயந்தியைக் கூடாத சாபம் பெற்று, வசிஷ்டனைக்கொண்டு புத்திரனைப் பெற்றுக்கொண்டான. வேதமும் இவ்வாறு கர்ப்பதானம் பெற்றுக்கொள்ள முறையிருக்கிறது. ஆதலால் தாயே! நீ எந்தப்பெரியவரைக் கொண்டாவது இப்போது கணவனில்லாதிருக்கிற பட்டத்தரசிகளிடம் புத்திரனைப் பெற்றால் எனக்குச் சம்மதிதான். அவ்வாறு செய்ய யத்தனி" என்று பீஷ்மன் சொன்னான்

பரிமள கந்தி பீஷ்மனைப் பார்த்து, "முன்னம் நான் படகுவிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, பராசருடன் கூடி ஒரு புத்திரனைப் பெற்றேன். அவன் தன்னை எப்போது நினைக்கிறாயோ, அப்போது வருவேனென வாக்குறுதி செய்து சென்றான். அவன் தான் வேதவியாசர் என்று, தான் வேத வியாசரைப் பெற்ற கதையை விவரமாய்ச் சொல்லி, அதனால் புத்திர சந்தானம் உண்டாக்கலாமென்று நினைக்கிறேனென்று கூற, பீஷ்மன் உடனே சம்மதித்தான். பரிமளகந்தி மருமகள்களுக்குப் பல

நீதிகள் சொல்லி, புத்திரசந்தானம் பெற வேத வியாசருடன் கூடுவதற்குச் சம்மதிக்கச்செய்து வேத வியாசரை நினைத்தாள். அவர் அக்கணமே வந்து, தாயை வணங்கி தன்னை எதற்கு அழைத்தாய் என்று வினவ, பரிமளகந்தி "சந்திரவமிசம் அற்றுப்போகாதபடி உனது தம்பி மனைவிகளிடத்தில் நீ சேர்ந்து புத்திர சந்தானம் பாலியும்" என்று வேண்ட, வேத வியாசர் "தாயே நினது கருத்தின்படி நடக்கிறேன்" என்றியம்ப, பரிமளகந்தி மருமகள்மாரிடத்துச் சென்று எச்சரித்துவந்து புத்திரனாகிய வேத வியாசரை அந்தப்புரத்துக்குச் செல்லக் கட்டளையிட்டாள். இவ்வரலாறுகளை ஆராய்வோம்.

சித்திர வீரியனுக்குக் காசிராஜன் புத்திரிகள் மாலையிட யத்தனித்தபோது, மற்ற அரசர்கள் தாசராஜன் மகள் புத்திரனுதலால் இழிகுலத்தரசன் என்றார்கள். சந்தனு, பரிமளக்கந்தியைக்கலியாணம் செய்தசமயத்தில், தாசராஜன், அவள் சூரியகுல வசுராஜன் புத்திரியென சகல அரசர்களுக்கும் முன்பாக நிலைநாட்டியிருக்க, அதை விட்டுவிட்டு இழிகுலத்தரசன் என்றார்கள். இது முன்னுக்குப் பின் முரண்படுகிறது. இரு பெண்களை சித்திர வீரியனுக்கு மணம் முடித்தார். ஒரு மனைவியை வைத்தே வாழ முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். இரண்டு பெண்டாட்டிக்காரனுக்குக் கொண்டை யென்னத்துக்கடி கொண்டை என்பர். இவ்விதமே பலவகை மொழிகள் ஏற்படக் காரணமென்ன? ஒரு மனைவிக்கு மேல் மணம் புரிந்து வாழ்வது கடினம் என்பதை விளக்குகின்றதன்றோ? அம்பா, சாளுவ ராஜனைக் காதலித்தாள். அவன் மறுத்து விட்டான். அதைவிட்டு மறுபடியும் பீஷ்மனிடம் சென்று தன்னை மணஞ் செய்யும்படி

வேண்டுகிறாள். ஒருத்தி ஒருவனை எப்பொழுது நினைத்துவிட்டாளோ, அதுமுதல் அவனே கணவனாவான். அவன் மறுத்துவிட்டால், வேறு மணஞ்செய்யாமலிருப்பதே உத்தமப்பெண்டிர்களின் கற்புநிலை. அதன்றி மறுபடியும் அம்பா பீஷ்மனை வேண்டியபடியால், இவள் கற்புநிலை ஐயப்படத்தக்கது. மறுபடியும் பரசுராமனிடம் தன்னைப்பீஷ்மன் கலியாணஞ்செய்துகொள்ளும்படியாகபிரயர்சு செய்யச் சொல்லுகிறாள். பரசுராமனும் அவ்விதமே பீஷ்மனுக்குச்சொல்ல, அவன் தான் சத்தியஞ்செய்ததை அறிவிக்கிறான். பரசுராமர் அதை ஒப்புக்கொள்ளாமல் யுத்தத்துக்கு அழைக்கிறார். இவர் பீஷ்மனுக்கு வில் ஆசிரியராயிருந்தும், பீஷ்மன் செய்த சத்தியத்துக்குப் பங்கம் விளையும்படி கூறுகிறார். குருவாயிருந்தாலும் சிஷ்ன் சொல்லுகிற நியாயம் சரியாயிருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டியதே கடமையாகும். நியாயம் என்பதைக் கவனியாமல் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்று சொன்னால் உலகம் ஒப்புமா? தன்னால் கற்பிக்கப்பட்ட சிஷனாகிய பீஷ்மனால் தோல்வியுற்றானென்றால், அவனுடைய வில் திறமையை என்னென்று கூறுவது? மானங்கெட்டு வாழ்வதைவிட, உயிரை நீக்குவது அறிஞர் செய்கையன்றோ? இப்பரசுராமரும் சாகாவரம் பெற்ற எழுவரில் ஒருவரன்றோ?

காசி ராஜன் புத்திரி அம்பா, பீஷ்மனைக் கொல்ல வேண்டுமென்று தவஞ்செய்ய, காளி மறுபிறப்பில் நீ அவனைப் பாரத யுத்தத்தில் கொல்லுவாய் என்று கூறுகிறாள். பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தவஞ்செய்ததற்கு காளி, மறுபிறப்பில் கொல்லக்கூடிய வரத்தைக்கொடுக்கிறாள். அம்பா வெகு காலம்

தவஞ்செய்தும், அவள் அந்தப் பிறவியில் யாதொரு பயனுமடையவில்லை. காளியை நோக்கித் தவஞ்செய்ததற்கு அவள் அக்கினியில் விழுந்து தற்கொலை செய்யும்படி தான் ஏற்பட்டது. காளி காளி யெனக் கத்தி, பலவிதமான நெய்வேத்தியங்கள் வைத்து, மிருகங்களைப் பலியிட்டு, அவளுக்குத் திருப்தி செய்வோரின் ஜீவியத்தில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகிறதே யன்றி, நன்மை ஏற்படுகிறதில்லை. மேலும் அம்பாவை யாக சேனனிடத்தில் அலியாகப் பிறப்பாய் என் று கூறுகிருள். ஆணும் பெண்ணுமல்லாத பேடி, இருந்தும் இறந்தவனேயாவான். இவ்வரத்தைக் கொடுத்த காளியின் கருணைக்குக் கைமாறு என் செய்வது!

பரிமள கந்தி பீஷ்மனிடம் சென்று, "உன் தம்பியின் மனைவிகளைக்கூடிப் புத்திரனைப்பாலியும்" என்று கூறுகிருள். இவ்விதம் மகனுடன் கூறுகிற இவளுடைய நாவன்மையை என்னென்றியம்புவது! பீஷ்மன் மறுத்துத் தரும சந்தானம் செய்வது நியாயமென்றுன். மக்களில்லாத பெண்களும், புருஷனில்லாத விதவைகளும், தரும சந்தானம் பெற்றுக்கொள்வது அந்நாளில் வழக்கமாயிருந்திருக்கின்றது. இவ்விழி செயலுக்குட்பட்ட பெண்களையும், சாஸ்திரங்களையும், பெரியோர்களையும், நாகரீக உலகம் எள்ளி நகையாடாதிருப்பது எங்ஙனம்? பலிச்சக்கரவர்த்தியும் தனக்குப் புத்திரனில்லாதபடியால், தீர்க்கதமன் என்ற முனிவரைத்தன் மனைவியுடன் கூடும்படி செய்து, ஒரு புத்திரனைப் பெற்றுக்கொண்டான். பலிச்சக்கரவத்தியும் சாகாத வரம் பெற்றவர்களில் ஒருவராவர். இவர் சாகாவரம் பெற்றதால் யாது பயன் கைக்கொண்டனரோ! தனது மனைவியை அன்னியன் புணர்

ந்து அதனால் புத்திரனைப்பெற்ற பலனே தான் போலும்! தீர்த்தமன் தாதியிடம் புணர்ந்தபோது, அம்முனிவருடைய வீரியத்தால் பதினொரு புத்திரர்கள் பிறந்தார்கள். ஒரு தடவைக்கூடி கலந்ததில் பதினொரு மக்களைப் பெற்றாளெனக்கூறப்படுவது இயற்கைக்கு மாறாகவும், உலகம் ஒப்பக்கூடாத செய்கையாகவுமிருக்கிறது. சூரிய குலத்துப்பட்டத்து ஸ்திரிகளாகிய கைம்பெண்கள் தங்கள் குருமார்களைக்கூடி, தங்கள் குலத்தை விருத்தி செய்தார்கள். அதை விபசார குலம் என்பதாக முன்னொரு கட்டுரையில் விளக்கினோம். கன்மாடபாத அரசன் வசிஷ்டனால் தனக்குப் புத்திரனைப் பெற்றுக்கொண்டான். இவ்விதமாய்ப்பலரும் தங்கள் குருவாலேயே சந்தானம் பெற்றுக்கொண்டார்களென்று அறிகிறோம். குருவே இவ்வித விபசாரத்தை புரிவுக்கு உடன் பட்டாரானால், மற்றவர்கள் ஏன் செய்திருக்க மாட்டார்கள்? ஆண்ணொவி நின்றுகொண்டிருந்தால், பிள்ளைகள் ஓடிக்கொண்டனரோ நீர் கழிப்பர்? இவ்வித விபாரஞ் செய்வதற்கு வேத சாஸ்திரமும் இடங்கொடுக்கிறதென்றால், அவைகளைச் சுட்டுப் பொசுக்கப்படவேண்டுமென்று சொல்பவர்களின் வார்த்தைகள் வீணாகாது. இவ்விதமாய் விபசாரம் செய்ததாகக் கூறப்படும் புத்தகங்கள் நம் நாட்டிடை இருக்கையில் மிஸ். மேயோ நம்மைக் கேவலமாய்க் கூறியதற்கு வருந்துவதில் யாது பயன்? பீஸ்மரும், பரிமள கந்தியும், சந்திர குலம் விருத்தியாவதற்கு, விபசாரத்தால் புத்திரன் பிறக்க ஏறபாடு செய்கிறார்கள்.

இக்காலத்தில் ஒரு விதவையானவள் ஒரு புத்திரன் வேண்டுமென்று நினைத்து, விபசாரஞ் செய்து புத்திரனைப் பெற்றால், வைதீகர்கள் அவளைக் கண்டித்து, ஜாதி

யை விட்டுத்தள்ளி, வெருட்டிவிடுவது வழக்கம். ஆகவே இவ்விதம் விபச்சாரஞ் செய்து பலர் எள்ளி நகையாடும் படி செய்யாமல் விதவைகளை மணஞ்செய்து கொடுப்பது எவ்வளவு மேலான செய்கையாகும். ஆகவே சுயமரியாதை; விதவை, காதல், கலப்புமணத்துக்கு வழிகாட்டியாக இருந்து, நாட்டின் பலவிடங்களிலும் சீர்திருத்த மணஞ்செய்யும்படி வற்புறுத்தும் நமது மாபெருந்தலைவர் ஈ. வெ. ராமசாமி, முதலியவர்கள் விடாமுயற்சி போற்றத்தக்கது. பரிமளகந்தி, தான் வேதவியாசரைப்பெற்ற கதையை, பீஷ்மனுக்குக் கூறுகிறாள். மகனிடம் தான் விபசாரஞ்செய்த கதையைக்கூற, அவரும் அதைப்பற்றி வருந்தியதாகத் தெரியவில்லை. பகுத்தறிவுள்ள மக்கள் இவ்வாறு விபசாரஞ்செய்யார். விபசாரம் செய்யும் மக்களை, மாக்களே என்று கூற யாது ஐயமுள்ளது? பரிமளகந்தி வேத வியாசரைக்கூடி புத்திரரைப் பெறும்படி மருமகள்களுக்குக் கூறுகிறாள். இவள் இவ்வாறு பராசருடன் விபசாரஞ்செய்த விபசாரியல்லவா? ஆகவே அச்செய்கைக்குநீதியும் கூறி மருமகள்களை வசப்படுத்துகிறாள். அந்தோ! பாவம்! அக்கைம்பெண்கள் என் செய்வார்கள். மாமியே அவ்விதம் கூறும்பொழுது அவர்கள் மறுத்துரைக்கவும் கூடுமா? பரிமளகந்தி, வேதவியாசரை நினைக்கஅவர் வருகிறார். அவள் அவரை மருமகள்களுடன் கூடும்படி வேண்டுகிறாள். இவரும் சாகாவரம் பெற்றவர்களில் ஒருவராகும். இவர் இவ்விபசாரஞ்செய்ய ஒப்புக்கொண்டாரென்றால் இவருடைய அறிவை என்னென்றியம்புவது?

எட்டாவது அத்தியாயம்.

———)o(———

வேதவியாசர் அந்தப் புரத்துக்குச் சென்று, அம்பிகையிருக்கும் பள்ளியறையிற் புகுந்தார். அம்பிகை உபசாரஞ் செய்து, முனிவரைக்கண்டு நாணமுற்று இரண்டு நயனத்தையும் மூடிப்பஞ்சணையில் படுத்துக்கொண்டாள் முனிவர் தாய் சொல்லை நிறைவேற்ற எண்ணி, அவள் இருக்கும் கோலத்தைக் கண்டும், அவளைப் புணர்ந்து எழுந்து, தாயிடத்து வந்து, வணங்கி, "அம்மணி! உமது கருத்தின்படி கர்ப்பதானம் செய்தேன். புணரும் காலத்து அம்பிகை கண்ணை மூடி இருந்ததினால், பிறக்கும் புத்திரன் நெடிய கடல் சூழ்ந்த உலகத்திலிருக்கும் அரசர்களெல்லாம் பணிய, ஆயிரம் யானை வல்லமையையுடையவனாயிருந்தாலும், நேத்திரம் மாத்திரம் இல்லாதிருப்பான்" என்று விளம்பினார்.

பின்னும் பரிமளக்கந்தி "அப்பா மகனே! அரசருக்கு நேத்திரமில்லாவிட்டால் யோக்கியதையல்ல. ஆதலால், அம்பாலிகையைப் புணர்ந்து, ஒரு புத்திரனைப் பாலியும்" என்றிரந்ததால், முனிவர் ஒத்துக்கொண்டு, அம்பாலிகையிடம் செல்ல, அவள் உபசரித்து அவரைக் கண்டு மெய் நடுக்கமுற்று சரீரம் வியர்க்க வஸ்திரத்தால் மூடிச் சயனித்தாள். அவள் இருக்கும் கோலத்தைக் கண்டு முனிவர் வாக்குதத்தத்தின்படி அவளைப்புணர்ந்து எழுந்து தாயிடத்து வந்து வணங்கித் "தாயே! அம்பாலிகை என்னைக்கண்டு சரீரம் வியர்த்தாள். அவளுக்குப் பிறக்கும் புத்திரன் மன்னாதி மன்னனாகயிருந்தபோதிலும், வியாதியையுடையவனாய் வெளுத்திருப்பான்" என்று சொல்லித் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

அம்பிகை ஒரு புத்திரனையும், அம்பாலிகை ஒரு புத்திரனையும் பெற்றார்கள். முன்னவள் புத்திரனுக்குத்திருதராஷ்டிரன் என்றும், பின்னவள் புத்திரனுக்குப்பாண்டு என்றும் பெயரிட்டு வளர்த்துவருங்காலத்தில், பரிமளகாந்தி அச்சிறுவர்களைக் கண்டு, "ஒருவன் கண்ணில்லாதவனாயிருக்கிறான். மற்றவன் வியாதியுடையவனாயிருக்கிறான். ஆகையால் ஒரு நல்ல புத்திரனை அடையவேண்டு"மென்று நினைத்து, அம்பாலிகையை அழைத்து, சில நீதிகள் சொல்லி, "இன்னுமொரு தரம் முன் அனுப்பிய முனிவரை அனுப்புகிறேன். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நான்கையும் நீக்கிக் களங்கமற்று கூடு" என்று சொல்லி, வேதவியாசரை நினைத்தாள். உடனே அவர் வர, "மகனே! நீ முன்னமளித்த இரண்டு புத்திரர்களும் அரசுரிமைக்குப் பொருத்தமல்லாதவர்களாய் இருக்கிறார்கள். ஆகையால் முன்போல மற்றொரு தரம் அம்பாலிகையைப் புணர்ந்து, நல்ல புத்திரனைப் பாலியும்" என்று பகர்ந்தாள். முனிவர் அதற்கிசைந்து, அம்பாலிகையிடத்துச்சென்றார். அம்பாலிகை முனிவரிடம் ஒரு தாதியை அனுப்பிவைத்தாள் அத்தாதி முனிவருள்ளம் பூரிக்கப் புணர்ந்தாள்.

முனிவர் எழுந்துவந்து அன்னையை வணங்கி, "தாயே! இப்போது பிறக்கும் புத்திரன் தென்றிசைக் கடவுளின் அமிசையால் வருவான். அவன் கல்வியிலும், பராக்கிரமத்திலும், யோக்கியத்திலும், ஞானத்திலும் சிலாக்கியமாயிருப்பான். ஆனால் இடம் பேதப்பட்டது. அதுதான் ஒரு குறைவேயன்றி, மற்றபடிக் குறைவில்லை. தாயே! இனி எனக்கு இப்படிப்பட்ட வேலையிடாதிருக்கவேண்டும்" என்று சொல்லி விடை பெற்றுச்சென்றார்.

தாதி யமன் அமிசை பெற்ற புத்திரனைப் பெற்று, விதுரன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தாள். இவ்வாறு வைசம்பாயனர் சொல்லி வரும்போது ஜெனமேஜெய மகாராஜன் "யமனுடைய அம்சம் பூலோகத்தில் வர வேண்டியதென்ன? அதனை விளக்கவேண்டும்" என்று கேட்க, அவர் கூறுகிறார்.

மாண்டவியரென்னும் முனி சாளுவ தேசத்தருகிலுள்ள வனத்தில், பன்னகசாலையொன்றியற்றி, ஐம்புலனையும் அடக்கி, அறிவைப் பிரம்மனிடத்திற் செலுத்தி, விழித்த கண் விழித்தபடி யோகத்திலிருந்தார். சாளுவ தேசத்து அரசனுடைய பொக்கிஷ சாலையில் சில கள்வர்கள் புகுந்து, திரவியங்களைத் தங்களுக்கு வேண்டியமட்டும் கட்டிக்கொண்டு வெளிப்பட்டார்கள். அதற்குள் அரசனுக்கு ஒரு சொப்பனந் தோன்றி, திடுக்கென்றெழுந்து, அருகில் காவலிருக்குஞ் சேவகர்களை நோக்கி, 'நமது பொக்கிஷத்தினருகே ஆளரவம் கேட்கிறது; அஃதென்னவென்று போயறிந்து வாருங்கள்' என்று கட்டளையிட, சேவகர்கள் வந்து, பொக்கிஷமிருக்கிற அலங்கோலத்தைக் கண்டு அரசனிடம் வந்து வணங்கி, "சுவாமீ! பொக்கிஷத்துக் கதவுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன; கள்ளர் வந்ததுபோல் தோன்றுகிறது" என்று சொல்ல அரசன் தலையாரிகளை அழைத்து "நமது பொக்கிஷத்தில் களவு செய்தக் கள்ளர்களைப் பிடித்து வந்தால், உங்கள் தலையறுபடாதிருக்கும்; இல்லாவிட்டால் உங்கள் தலை போய்விடும்" என்று கட்டளையிட்டார்.

தலையாரிகள் அவ்வுத்திரவை சிரமேற்கொண்டு பொக்கிஷ சாலையிலிருந்து காலடிக்குறியை நோக்கிக்கொண்டு

அந்நகரத்தைக்கடந்து, மாண்டவியர் யோகஞ்செய்கிற வனத்தில் வந்தார்கள். கள்ளர்கள், தலையாரிகள் வருவதையறிந்து முனிவருடைய பன்னக சாலையில் நுழைந்து கொண்டார்கள். மாண்டவியர் விழித்தகண் விழித்த படி தவஞ்செய்கிறதைக்கண்ட தலையாரிகள்,முனிவர் யோகத்திலிருக்கிறாரென்றுணராமல்,'இவ்வழியாக யாராவது சென்றார்களா?' வென்று வினவ, அவர் யோகத்திலிருக்கிறவராகையால், இவர்கள் கேள்விக்கு உத்திரவுகொடுக்காமலிருந்துவிட்டார். தலையாரிகள் பன்னக சாலையில் தேடிப்பார்க்கும்பொழுது கள்ளர்கள் பொக்கிஷத்தோடு அகப்பட்டுக்கொண்டார்கள். தலையாரிகள் கள்ளர்களோடு மாண்டவியரையும் பிடித்துக்கொண்டுபோய் அரசன் சபையில் விட்டார்கள். அரசன் கள்ளர்களைச் சிரச்சேதம் செய்யும்படி ஆக்ஞாபித்து, பெரியவர் யாரென்று தலையாரிகளை வினவ, அவர்கள் "இவன் திருடர்களுக்கெல்லாம் தலைவன்; இவனுடைய பன்னக சாலையில்தான் இந்தக்கள்ளர்கள் இருந்தார்கள். "இவனை விட்டுவிட்டால் இன்னும் ஐதை கூட்டுவான்" என்று சாதிக்க, அரசன் "இவனைக்கழுவேற்றுங்கள்" என்று கட்டளையிட்டு, "இவன் கள்ளர்களுக்கெல்லாம் குருவென்றீர்கள்; ஆகையால் இவனை மற்றக்கள்ளர்கள் பார்க்க வருவார்கள். அவர்கள் வந்தால் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என அரசன் கூற, அவர்கள் அவ்வாறே கழுவேற்றினார்கள். முனிவர் யாதொரு வருத்தமுமில்லாமல் கழுமரத்தில் விழித்தகண் விழித்தபடியே தவத்திலிருந்தார். சிலநாட் சென்ற பின்பு சில தேவர்களும், அநேக முனிவர்களும், அந்தரத்திற் செல்லும்பொழுது, மாண்டவியராகிய முனிவரிருக்கிறநிலையைக்கண்டு கீழே இறங்கிவந்து, இவ்வளவு

துன்பப்படும்படி வந்த காரணமென்ன? என்று கேட்க, மாண்டவியர், பிராரத்துவ சம்மந்தத்தால் நேரிட்டது என்று சொல்ல, அவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள். இவ்விஷயத்தைக் கண்ணுற்ற தலையாரிகள் அரசனுக்கு அறிவிக்க, அரசன் மாண்டவியரைக் கழு மரத்திலிருந்து இறக்கி, நெஞ்சிலிருக்கும் சூலத்தை வாங்க யத்தனப்பட்டபோது, நெஞ்சிலிருக்கும் கழுமுனை வருத்துமாதலால், அரசன் அரத்தால் அச்சூலத்தை இருபுறமும் இராவி விடக் கட்டளையிட்டான். அவ்வாறே செய்யப்பட்டது. நெஞ்சில் கழுவாணி நின்றமையால் அன்று முதல் ஆணி மாண்டவியர் என்று அவருக்குப்பெயர் வந்தது.

அப்பால் அம்முனிவர் இச்சம்பவம் தனக்கு எதனால் ஏற்பட்டதென்று அறிய யமனிடம் சென்று "தென்றிசைத் தலைவனே! யான் கழுவால் வருந்தக் காரணமென்ன?" என்று கேட்க, யமன் "சுவாமி! வாலைப்பருவமாக இருந்த காலத்தில், தும்பிகளைப்பிடித்து, அவற்றின் வால்களில் முட்களைக்குத்தித் தூண்டிவிட்டீர்; அவ்வினைதான் உமக்கு நேரிட்டது" என்றான். முனிவர், "எவ்வகைப்பட்ட பாவம் புரிந்தபோதிலும் வேதமோதித்துறவியாகித்தவஞ்செய்தேன்; தருமம் மேலிடப் பாவம் பறந்து போகுமென்று வேதம் முறையிடுகின்றது. இதைக்கவனிக்காமல் எனக்குச் சகிக்கக்கூடாத இம்சையைக் உண்டாக்கினாய்" என்று கூற, யமன் "கடவுள் எனக்கு ஒரு நியமனஞ்செய்திருக்கிறார். அதாவது ஒரு பெரிய மலை தொங்குகின்றது. அதன் கீழ் சிங்காசனம். சிங்காசனத்தின் கீழ் அக்கினியாறு இருக்கின்றது. நான் சிறிது பிசகுவேனாகில், மலையறுந்து என் தலைமேல் விழும். அப்பால் அக்கினியாற்றிற் பிரவேசமாவேன். தங்களு

க்கு நேரிட்ட துன்பம் நீதியல்லாதிருந்தால், இதற்குள் நான் அக்கினியாற்றிற் பிரவேசித்திருப்பேன்'' என்றான். முனிவர் "13-வயது வரைக்குஞ்செய்த பாவபுண்ணியம் பிள்ளைகளுக்கு நிமித்தமில்லை. இன்று முதல் இவ்விதம் நடத்த வேண்டியது. நீ எனக்குப்பதின்மூன்று வய்துக்குள் செய்த தீங்கை ஏற்றபடியால், பூலோகத்தில் சந்திர வமிசத் தாதிவயிற்றிற் பிறந்து, விதுரன் என்று பெயர் கொண்டு, அரசர் துதிக்கச் சிறப்புற்றிரு'' என்று சொல்லிச்சென்றார். அச்சாபப்படி யமன் தாதி வயிற்றிற் பிறந்தானென்று வைசம்பாயனர் கூறினார். இவ்வரலாறுகளை ஆராய்வோம்.

வேதவியாசரோ பிறக்கும்போதே, காவி, காம்பர, தண்டு, கமண்டலதாரியாய் வேதத்தைக் கையில் பிடித்துக்கொண்டு பிறந்தாரென முன்னமேயே கண்டோம். அவ்விதம் அவர் பிரம்மச்சாரியாயிருக்க, சித்திரவீரியன் மனைவிகளாகிய கைம்பெண்களைப் புணருகிறார். கைம்பெண்களைப் புணர்ந்த பஞ்சமா பாதகனை வேதவியாசரை முனி என்று கருதுவதற்கு இடமில்லை. தவிர அக் கைம்பெண்களாகிய அம்பிகை கண்ணைமூடிக்கொண்டும், அம்பாலிகை வஸ்திரத்தால் மூடிக்கொண்டும், சயனித்தார்கள். இவர்கள் இவ்விதமாய் அச்சத்தாலிருக்கும் போது, முனிவர் அவர்களைக் கூடினால், ஆங்கு இன்பம் ஏற்படக்கூடுமா? அதாவது ஆங்கு உத்தமக் காதல் நிகழ்தல் அரிது. ஆண் பெண் இருவரும் மனமொத்துக் கூடுவதுதான் பிரயோஜனமேயன்றி, மனம் வேறுபட்டுக் கூடினால் பிரயோசனமில்லை என்பது பெற்றும். அப் பெண்களே அச்சத்தோடிருந்தாலும், அவர்களின் அச்சத்தை நீக்கிச் சந்தோஷமாகப் பேசி, அவர்களின் மன

தைக் கவர்ந்து, அப்பால் இன்பம் அனுபவிப்பதே அறிவுடையார் செய்கையாகும். அன்றி, பெண்ணின் மனமின்றி அவர்களுடன் கூடுவது புல்லர் செய்கையாகும். காமத்து வழியில் கருத்தைச் செலுத்தாமல், ஸ்திரிகளைக் கனவிலும் நினையாமலிருப்பது பிரமச்சரியம் எனப் பல நூல்களிலும் கூறப்படுகிறது. வேதவியாசர் அவர்களை வசப்படுத்திக் கூடியிருப்பாராளுல், அரசாள யோக்கியதையுள்ள பிள்ளைகள் பிறந்திருக்கலாம். ஆனுல் திருதராஷ்டிரன், பாண்டு முதலிய இருவர்கள் பிறந்தும் அரசுக்கு யோக்கியதையில்லாமலிருக்கிறுர்கள். மறுபடியும் பரிமளகந்தி அம்பாலிகையை முனிவருடன் களங்கமற்று கூடும்படிக் கூறுகிருள். முதலிலேயே அம்பாலிகை அச்சத்தோடு புணர்ந்ததினுலே நல்ல புத்திரன் பிறக்கவில்லை என்று அறிந்த பரிமளகந்தி மறுபடியும் கூடும்படி வேண்டுவது எவ்வளவு அறிவீனம்? முனிவர் அம்பாலிகையிடம் செல்ல, அவள் ஒரு தாதியை அனுப்புகிருள். முனிவர் அத்தாதியைக் கூடி இன்பமடைந்தார் பரிமளக்கந்தி அம்பாலிகையைக் கூடச்சொன்னுளேயன்றி, தாதியைக் கூடும்படிக் கூறவில்லை. அவ்விதமிருக்கத் தாதியைக் கூடினது ஞாயமல்லாத செய்கையாகும். அம்பாலிகை தாதியை அனுப்பினுல், முனிவர் அவளை விலக்கிவிடவேண்டியதே நியாயமாகும். அன்றி வேதவியாசர் தாதியைக்கூடினதினுல், அவர் காமத்தின் கரைகாணுது அலைந்தாரென்று கூற இடமேற்படுகிறது. தாதி பெற்ற விதுரன் தென்றிசைக் கடவுள் அமிசையென்று கூறப்படுகிறது.

மாண்டவியரை அரசன் கழுமரத்திலேற்றுகிருன். அம்முனிவருடைய நெஞ்சில் கழுவாணி ஏற்றப்பட்டிருக்

தும் அவர் வருந்தாமல் தவஞ்செய்கிறார்! இவர் தமது யோக மகிமையால் விடுவித்துக் கொள்ளலாம். முனிவர் கழுமரத்திலிருக்கும்போது பல தேவர்களும், அனேக முனிவர்களும் வந்து, இவ்வளவு துன்பம் வரக் காரணமென்ன? என்று வினவுகிறார்கள். முனிவர்களும், தேவர்களும், திரிகால உணர்ச்சி பெற்றவராயிருந்தும், அவர்களுக்குத் தெரியாமற்போனதென்ன? மாண்டவியரும் அதையறிந்தவரில்லை.

மாண்டவியர் தனக்கு ஏற்பட்ட துன்பம் எவ்விதம் நேரிட்டதென்று அறிய யமனிடம் செல்லுகிறார். இவர் செய்த தவத்தால் யாது பயனோ? தனக்கு ஏற்பட்ட துன்பத்தையறியக்கூடாத முனிவர் யமனை எவ்விதம் கண்டனரோ? யமனிடம் தனக்கு இவ்வித சம்பவம் எவ்விதம் நேரிட்டதென்று கேட்க, அவன் வாலைப்பருவத்தில் தும்பிகளைப்பிடித்து வாலில் முட்குத்தி தூண்டிவிட்டாய்; அதனால் ஏற்பட்டதென்று கூற, முனிவர் "எவ்வித ப்பாவங்களும் தருமம் மேலிட பாவம் மாய்ந்துபோம். என்று வேதநூல் கூறுகிறது. அதைக்கவனிக்காமல் எனக்கு ஏன் இவ்வளவு இம்சை கொடுத்தாய்" என்று கூறுகிறார். யமன் அதற்குப் பின்வரும் நியாயம் கூறுகிறான். "நான் இருக்குமிடத்துக்கு மேலே மயிரில் கட்டிவிடப்பட்டிருக்கிற பெரிய மலை; கீழே அக்கினியாறு; நான் நியாயம் தவறினால், மேலேயுள்ள மலை என்மேல் விழுந்து, நான் அக்கினியாற்றில விழுவேன்" "தருமம் மேலிடப் பாவம் மாய்ந்துபோகும் என்று வேதம் கூறுவதாக" முனிவர் கூறுகிறார். யமன் தான் செய்தது நியாயம் எனபதற்கு அக்கினியாற்றையும், மயிரில் கட்டப்பட்ட மலையையும் ஒப்பிடுகிறான். இது ஒன்றுக்கொன்று முர

ண்படுகிறது வேதத்தை நம்புவதா? அல்லது யமன் கூறு வதை நம்புவதா? யமனுடைய சிங்காசனத்துக்கு மேல் மயிரில் கட்டப்பட்ட மலை தொங்குகின்றது. என்னே விந்தை! ஒரு சிறு கல்லைக்கூட மயிர்தாங்கக் கூடாததாயி ருக்க, அளவற்ற பிகப்பாரமுள்ள உலகத்திலுள்ள வஸ் துக்களிலெல்லாம் பெரிதாயுள்ள, அசைக்க முடியாத பெரிய மலையை மயிரால் கட்டித் தொங்கவிடப்பட்டிருக் கிறது என்று சொன்னால், பொய்யுலகமும் ஒப்பக்கூடா ததாயிருக்க, நாகரீக உலகம் எப்படி நம்பும்? மேலும், கீழே அக்கினியாறு! அக்கினியின் வெப்பம் பட்டவுட னேயே மயிர் கருகிவிடுமன்றோ? அக்கினி, ஆறாக ஓடுவது வியக்கத்தக்கதன்றோ? இவ்வித ஆபாசமான, வரலாறுகளை அறிஞர் ஒப்புக் கொள்ளத்தக்கதல்ல. முனிவர் "13-வயதுக்குள் செய்த பாவ புண்ணியங்க ளுக்கு நிமித்தமில்லை; இன்றுமுதல் இவ்விதம் நடத்த வேண்டியது" என்று யமனுக்குக் கட்டளையிடுகிறார். யமனுக்குக் கட்டளையிட வேண்டியவரிவரா? இவர் கட வுளா? யமன் இவர் கூற்றுக்குஞ் செவி கொடுக்கவா? அல்லது அவனுக்கு மேலுள்ள கடவுளுக்குச் செவி கொ டுக்கவா? முனிவர், "எனக்குச் சகிக்கக்கூடா இம்சை யைக் கொடுத்ததால் நீ சந்திர வமிச தாசியின் வயிற்றில் பிறந்து விதுரன் என்று பெயர் கொண்டிரு" என்று யமனைச் சபிக்கிறார். முன்னம், முனிவர் கழுவிலிருக்கும் போது யாதொரு வருத்தமுமில்லாமல் தவத்திலிருந்தார் என்று கூறப்படுகிறது. பின்னால் யமனைச் சபிக்கும் போது சகிக்க முடியாத இம்சையைக் கொடுத்தாய் என்று சொல்லப்படுகிறது. இது முன்னுக்குப்பின் முர ண்படுகிறது தனக்கு ஏற்பட்ட இன்னலைத் தவிர்த்துக் கொள்ள முடியாதவராகிய இவர், தப்பிதஞ் செய்யாத

யமனை எவ்விதம் சபித்தார்? யமனோ தன்னிச்சையாய் ஒன்றும் செய்தவனல்ல. அவனுடைய கடவுளின் ஆக்ஞைப்படி செய்தான். இதற்கு அவனைச் சபித்தது நியாயமில்லாததும், அயோக்கியத் தனமுமாகும். முனி, விதுரனாகப் பிறக்கக்கூறுகிறார். அவனும் அவ்வாறே வந்து பிறந்தான். ஆனால் யமனுடைய ஸ்தானத்தில் யாரிருந்து வேலையை நடத்துகின்றனரோ? இனி அடுத்து வரும் அத்தியாயத்தில் காண்க.

ஒன்பதாவது அத்தியாயம்.

திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் ஆகிய மூவருக்கும் பீஷ்மர் கல்வி, வில் வித்தை முதலியவை கற்பித்து, திருதராஷ்டிரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து முடிசூட்டி, பாண்டுவுக்கு இளவரசுப்பட்டங்கட்டி அரசாண்டு வந்தார்கள். விதுரனை எல்லா மந்திரிகளுக்கும் தலைமையாக்கினார்கள் திருதராஷ்டிரனுக்குக் காந்தார தேசத்து அரசனாகிய சுவேத மகாராஜன் மகள், காந்தாரியைக் கலியாணம் செய்வித்தார்கள். இனி குந்திமா தேவிக்குக் கர்ணன் பிறந்ததைப் பார்ப்போம்.

போஜரின் வம்ச பரம்பரையிற் றோன்றிய சூரசேனனென்பவனுக்கு ஒரு குமாரத்தியுண்டு. அவள் பெயர் பிரதை. (குந்தி) முற்றத்துறந்த, ஆனால் கோபத்தை மாத்திரம் விடாமலிருக்கிற வாச முனிவர் சூரசேனனிடத்துக்கு வந்தார். அரசன் வணங்க, முனிவர் ஆசீர்வதித்து, “நாம் சில நாள் இந்த இடத்திலிருந்து

சாதுர்மாத விரதம் அனுஷ்டிக்கவேண்டும். எனக்கு ஊழியஞ் செய்ய ஒரு ஆள் அமைக்கக்கடவை'' என்று கூற, அரசன் தனது குமாரத்தியாகிய பிரதையை முனிவருக்கு ஊழியஞ் செய்யும்படி ஏற்படுத்தினான். அவள் அவருக்கு மிகுந்த பக்தியோடு பணிவிடை செய்ய முனிவர் அதிக சந்தோஷமடைந்து, "அம்மணீ! எனக்குப் பணிவிடை செய்தவர்கள் சாபத்தையடைந்தார்களேயன்றி லாபத்தையடைந்தவர்களில்லை நீ ஒருவள்தான் என் மனம் மகிழும்படி பணிவிடை செய்து வந்தாய்; ஆகையால் சில மந்திரங்களைச் சொல்லுகின்றேன்; அவைகளைக் கற்றுக்கொள். அந்த மந்திரங்களை உச்சரித்தவுடன் அந்தந்த மந்திரங்களுக்குரிய தேவதை பிரசன்னமாகி உன்னைக் கூடிக்கலந்து தங்களைப் போன்ற புத்திர சந்தானம் கொடுத்துப் போவர். இதனைப் பத்திரமாய் வைத்துக்கொள் என்று அவள் செவியில் ஐந்து மந்திரங்களை உபதேசித்துத் தமது தவ வனத்துக்குச்சென்றார். பிரதை அம்மந்திரங்களைக் கற்றுத் தனக்குரிய கன்னிகாமடத்தில் களிப்புற்றிருக்கும் நாட்களில் ஒரு நாள், சந்திரோதையமானவுடனே மேல்மாடியில் உலாத்தி வருஞ் சமயம், முனிவர் கூறியமந்திரங்களை நினைத்து, பெதும்பைப் பருவமாக இருக்கிறோம் என்பதையும் யோசியாமல் ஒரு மந்திரத்தை உச்சரித்தாள். அந்த மந்திரம் சூரிய மந்திரமாதலால், உச்சரித்தவுடனே அதற்குரிய மந்திர தேவதை ஓடிவந்து, பிரதை என்னுங் கன்னிகை உம்மை அழைக்கிறாளென்று சூரியனை இழுக்க, சூரியன் திடுக்கிட்டுத் தனது ஞானதிருஷ்டியால் அறிந்து, தனது சுயரூபத்தோடு வந்தால் காலம் பேதப்படுவதுமன்றி, வரவை யாவரும் அறிவார் என்று நினைத்து, தமது ரூபத்தை மாற்றி வேதியர் வடிவங்கொண்டு அந்த மந்திர

தேவதைகளோடு கன்னிகை இடத்திற்கு வந்தார்.

அப்போது கன்னிகை பார்த்து, திடுக்கிட்டுத் தன்னைத்தானே மறந்து சற்றுநேரம் அயர்ந்து, பின்பு தெளிந்து "தெய்வமே! நான் இருக்கும் கன்னிகா மாடத்தின் மேல் ஆண் பக்ஷிகளும் பறக்கொணாதென்றால், இதோ கோடிச்சூரியப்பிரகாசம் போல ஒளிவீசும் தேகத்தையுடைய ஒரு மகாபுருஷர் கன்னிகா மாடத்துக்கு வருகிறதுமன்றி என்னையே பார்த்துக்கொண்டு வருகிறார். இவர் யார்?" என்று ஐயுற்று நிற்கும்போழுது, சூரியன் வந்து நின்று கன்னிகையைப்பார்த்து, "கன்னிகையே! நான் நெடியகடல் சூழ்ந்த உலகத்திலுள்ள இருளை நீக்கிப் பல பொருளையும் விளங்க வைக்கிற பானு இரவுக்கு விரோதியாகியஎன்னை இந்த இரவில் அழைக்க வேண்டியதென்ன?"வென்று வினவ, அக்கன்னிகை "சுவாமி! அடியேன் சிறுவயதாயிருக்கும்பொழுது தவ சிகாமணியாகிய துருவாசமுனிவர் வந்தார். அவருக்குப் பணிவிடை செய்தேன். அவர் களிகூர்ந்து ஐந்து மந்திரத்தை யுபதேசித்து, அவைகளின் பெருமைகளைக்கூறி ஆசீர்வதித்துப் போயினர். அவைகளில் ஒரு மந்திரத்தை உச்சரித்துப்பார்த்தேன். தாங்கள் வந்தீர்கள்" என்று பதறிப்பயந்து சொன்னாள். சூரியன் தன்னைக் கூடென்றுகூற, கன்னிகை திடுக்கிட்டு, "தெய்வமே! இதென்ன ஆச்சரியம். நாமோ பெதும்பைப்பருவத்தை யடைந்திருக்கிறோம். இவரோ தேவருள் சிறப்பான சூரிய பகவான். நம்மை நோக்கிக் கூடென்றுரைக்கிறார். நாம் மறுத்தால் சாபம் ஏற்படும் போலிருக்கிறது. துருவாச முனிவர் இம்மந்திரத்தால் புத்திர சந்தானம் அடைவாய் என்று கூறியிருக்கிறார்.

மந்திர சக்தியால் வந்த இவரை நீக்கி விடுவோமாகில் முனிவராலும் சாபம் வரும். கூடுவோமாகில் கற்புடைமைக்கு அழிவு வருதலுமன்றி, பல பேரால் கன்னிகை பிள்ளை பெற்றாளென்று நிந்திக்க நேரிடும். கலவிக் குரிய மங்கைப்பருவத்தை இன்னும் நாமடையவில்லை. காலமல்லாத காலத்தில் மந்திரத்தை உச்சரித்தபடியால் இதனால் வரும் கஷ்டத்தை நானேயனுபவிக்க வேண்டியது தான்" என்று தனக்குள் தீர்மானித்து, சூரியனை நோக்கி, "சுவாமி! இப்போது தாங்கள் கூறியபடி கூடுவதற்கு நானோ மங்கைப்பருவமடையாதவளாயிருக்கிறேன். இதற்கு விடையென்ன?;' என்று வினவ, பானு மங்கைப் பருவத்தை அருளிச்செய்தார். கன்னிகை "இனிப்புணர்வதற்குத் தடை சொல்லக்கூடாது. தடைகூறாமல் புணர்வேனாகில் உலகிலுள்ளோர் கற்பழிவானவளென்று நிந்தை கூறுவார்கள். இதற்கென்ன செய்வேன்? என்றாள். அதற்குச் சூரியன், 'நீ அஞ்சாதே! என்னைக்கூடு! உடனே உனக்கு ஒரு புத்திரனுண்டாவான். அப்புத்திரனைப் பேழையில் வைத்து கங்கையில் விட்டுவிடு. கங்கை அச்சிசுவைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பாள். மேலும் இப்போது கிடைத்திருக்கிற மங்கைப்பருவம் நீங்கி முன்போல பெதும்பைப்பருவத்தை யடைவாய். அஞ்சாமல் என்னைச்சேர்' என்றான். பிரதை அதற்குச்சம்மதித்து சூரியனை அழைத்துப் பொற் பஞ்சணையிலிருத்த தானும் உள்ளும்புறமும் ஒத்து ஐந்துவித ஆலிங்கன முதலியவற்றை இயற்றிக் கூடிக்கலந்தாள். உடனே சூரியன் தமது கிருபா நோக்கத்தை இவள்மேல் செலுத்தித் தமதிடத்துக்குச் சென்றார்.

அப்பால் பிரதையாகிய கன்னிகை, (குந்தி) கர்ப்பவதியாகி ஒரு முகூர்த்தத்திற்குள் ஒரு புத்திரனைப் பெற்

ருள். ''இப்புத்திரனை வைத்திருப்போமாகில் சகலரும் அறிவார்கள். அதன்மேல் நமக்கும், நமது தந்தைக்கும் இழிவு நேரிடும்" என்று பிரதை நினைத்து, ஒரு பேழையில் தன் வஸ்திரத்திலொன்றை விரித்து, அதில் சிறுவனை வைத்து கங்கையில் விட்டு கங்கையை வணங்கித்தன் கன்னிகா மாடத்துக்கு வந்தாள். வந்தவுடன் முன்போல பெதும்பைப்பருவத்தை யடைந்தாள்.

கங்கையில் விடப்பட்ட சிசுவடங்கிய பேழையை உதயத்தில் அத்தினபுரத்துக்கு அரசனை திருதராஷ்டிரனுக்குச் சாரதி ரதையனும் அவன் மனைவி ராதையும் கங்கையில் கண்டெடுத்து தங்களுக்குப் புத்திரபாக்கியமில்லாதபடியால் அப்புத்திரனை வளர்த்து நல்ல சுபமுகூர்த்தத்தில் என்ன பெயரிடுவது என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். சூரியனால் ஏவப்பட்ட ஆகாயவாணி வந்து கர்ணன் என்று நாமகரணஞ் செய்யும்படி சொல்லியது. அப்பால் அப்புத்திரனுக்குக் கல்வியும், வித்தையும் கற்பித்து வரும்பொழுது, கர்ணன், பரசுராமரிடம் சென்று வில்வித்தை கற்பிக்கும்படி வேண்ட, அவர் ''நீ பிராமணனோ?'' வென்று கேட்க, கர்ணன் ஆமென்றுரைத்தான். பரசுராமர் ஒத்துக்கொண்டு தனக்குத் தெரிந்த வில் வித்தைகளையெல்லாம் கர்ணனுக்குக் கற்பித்தார். கர்ணன் அவைகளை நன்றாய்க்கற்றுக்கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தான்.

இவ்விதமிருக்க, ஒரு நாள் பரசுராமர் தனது தலையைக்கர்ணன் தொடையின்மேல் வைத்து நித்திரை செய்தார். அப்போது இரத்தவாரி என்கிற ஒரு புழு வந்து கர்ணனுடைய தொடைச் சந்தில் நுழைந்து துளைத்தது. கர்

ணன் அதற்கஞ்சாமல் குருவுக்கு நித்திரைபங்கம் வரு மென்று நினைத்து அசையாமலிருந்துவிட்டான். அந்த இரத்தவாரி என்கிற புழு கர்ணனுடையத் தொடையைத் துளைக்கவே ரத்தவெள்ளம், புறப்பட்டுப்பரசுராமருடைய தேகத்தை நனைத்தது. பரசுராமர் விழித்துக் கர்ண னைப் பார்க்கும்பொழுது அவன் இரத்தத்துக்கு அஞ்சா மலிருக்கிற குறிப்பையறிந்து கர்ணனை க்ஷத்திரியனாகத் தீர்மானித்து, "அடா கர்ணா! நீ யார்? உண்மையை வெளிப்படுத்தென்று வினவ, கர்ணன் மௌனமாயிருக்க வே பரசுராமர் சினங்கொண்டு, கர்ணா! நீ இந்த இரத் தத்தைக்கண்டு சிறிதுமஞ்சாமலிருந்தமையால் நீ க்ஷத் திரியனென்பதற்குச் சந்தேகமில்லை. நானோ பீஷ்மன் முன்னிலையில் க்ஷத்திரியருக்கு வில் வித்தைக் கற்றுக் கொடுப்பதில்லை என்று சபதஞ் செய்திருந்தேன். அச்சப தத்தைக் கெடுத்து என்னிடம் வில்வித்தைக் கற்றுக் கொண்டமையால், நீ என்னிடத்தில் கற்ற வில் வித்தை நல்ல சமர் முகத்தில் உதவாமற் போகக்கடவது" என்று சாபமிட்டார். அச்சாபத்தை ஏற்று கர்ணன் அரண் மனை வந்து சேர்ந்து வாழ்ந்திருந்தான்.

இவ்வரலாற்றை ஆராய்வோம்.

துருவாச முனிவர் கோபமுள்ளவரென்று கூறப்படு கின்றது. கோபத்தாலேயேஅடிதடி கலகங்களும், சச் சரவுகளும், மனஸ்தாபங்களும், கொலைகளும் ஏற்படுகின் றன. கோபம் சண்டாளம் என்று கூறப்படுகிறது. கோபமுள்ளவனே சகலபாவகாரியங்களுக்கும் அஞ்சான். கோபத்தையடக்காத முனிவரால் உலகுக்கு யாது பயன்? பிரதை மிகவும் பக்தியோடு முனிவருக்குப் பணிவிடை

செய்கிறான். இவ்விதம் செய்த பயபக்தியினாலோ, அல்லது முனிவர் இச்சையாலோ முனிவர் தனக்குப் பணிவிடை செய்தவர்கள் சாபத்தையடைந்தார்களன்றி லாபத்தையடைந்தவர்களில்லை என்கிறார். யானையைப் பராமரிப்போன் அதற்கு எவ்வளவு பக்ஷமாய் நடந்த போதிலும், என்றைக்காவது ஒரு நாள் சிறிது பிசகுவானாகில் அவனைச்சமயம் பார்த்துக்கொல்வதுபோல, இம்முனிவருக்குப் பல நாட்கள் பணிவிடை செய்து ஒருநாள் சிறிது பிசகுவானாகில் அவனுக்குச் சாபமே கொடுப்பது அவருடைய இயற்கை போலும்!

நமக்கு இன்றியமையாததாயுள்ள இத்தகைய கோளத்தைச் சூரியபகவான் என்ற கடவுளாக வைத்து வணங்குவதனால் இந்தியர்களுடைய அறிவற்ற தன்மை விளங்கும். சூரியன் தெக்ஷணாயணம் உத்திராயணத்துக்குப் பிரயாணம் செய்யுமேயன்றி தன்னைச் சுற்றவாவது ஏற்பட்ட இடத்தைவிட்டு கிழக்கு மேற்கு அசையவாவது செய்யாது. இவ்விதமிருக்க சூரியன் பிரதையிடம் வந்தானென்று கூறப்படுவது எவ்வளவு நம்பமுடியாத செய்கையாயிருக்கிறது. இது முழுப் பூசணிக்காயை சோற்றிலொழித்து வைப்பதையொக்கும். மேலும் சூரியன் பிரதையைக் கூடுகிறான். அக்கினியாகிய சூரியன் பிரதையைச்சேர்ந்தால் எரிந்துபோகமாட்டாளா? புராதன காலத்தில் மக்கட்கு அவசியமான எந்த வஸ்துக்களையும் கடவுளெனப் பாவித்து வணங்கினார்களென்று கூறச் சந்தேகமில்லை. உதாரணமாக மரம், நதி, சூரியன், சந்திரன், அக்கினி, பசு, காற்று, இன்னும் இதுபோன்ற

அளவற்றன கூறலாம். தொட்டது தொண்ணூறுக்கும் கடவுளென்றும், சாஸ்திரமென்றும் கூறப்படுகிறது. அவைகளை விஸ்தரித்தால் விரியும். ஆதலால் இம்மட்டுடன் விட்டுவிடுவோம். பிரதை சூரியனை நோக்கி, "நான் இன்னும் மங்கைப்பருவம் அடையாதவளாயிருக்கிறே என்று சொல்ல, சூரியன் மங்கைப் பருவத்தை அரு...ச் செய்தார். பெதும்பைப் பருவமும், மங்கைப் பரு... உடலுக்குடன் மாறக்கூடிய செய்கைகளா? பி...த இனிப் புணர்வேனாகில் உலகத்தார் கற்பழி வானவளென்று சொல்லுவார்களே என்று சொல்லுகிறாள். சூரியன், நீ என்னைக் கூடு, பிறக்கும் புத்திரனைப் பேழையில் வைத்துக் கங்கையில் விட்டுவிடு. நீ முன் போலப் பெதும்பைப் பருவத்தையடைவாய்" என்று கூறுகிறார். தற்காலத்திலும் சிலர் இவ்விதமாய் குழந்தைகள் பெற்றுப் பலவிதமாய் மறைத்துவிடுகிறார்கள். இம்மாதிரி கேவல நடத்தையுடைய ஓர் கன்னிகையாக இருக்கலாம் போலும்!

உலகம் அறியாமல் கள்ளத்தனமாய் கூடினால் அதனால் கற்புக்கு அழிவு வராதுபோலும்! ஒருவனும் அறியாமல் களவு செய்கிற ஒருவனைக் கண்டுபிடிக்கப்படும் வரைக்கும் அவன் செய்தது களவு இல்லையோ? ஆகவே ரகசியமாய் கற்பழிக்கப்பட்டால், அது கற்பழிந்தாக எண்ணப்படுவதில்லை போலும்! இத்தகைய அயோக்கிய செய்கையுடைய சூரியனைச்சிலர் கடவுளென்றும் வணங்குகின்றனரே! பிரதை ஒரு முகூர்த்தத்திற்குள் ஒரு புத்திரனைப் பெற்றாள். ஒன்றரை மணி நேரத்திற்குள் ஒரு புத்திரனை பெற்றாளெனக் கூறுவது எவ்வளவு அறிவீனமாயும், இயற்கைக்கு மாறாகவும் இருக்கிறது. புத்திர

னைப் பேழையில் வைத்து கங்கையில் விட்டுவிடுகிறாள். இவளுக்குப் புத்திரன்மேலுள்ள வாஞ்சைதானென்னே! இத்தகைய பதரை பஞ்சவர்களுக்குத் தாய் என்றும் உ ர்த்திக்கூறிப் பலர் மகிழ்கின்றனரே! ஆகாயவாணி ...து கர்ணனுக்குப் பெயரிடும்படி சொன்னது. ஆகாய ...ணி வந்து இக்காலத்திலெங்காவது சாக்ஷி கூறுகிறதா? ...ல்லது பேசுகிறதா? இல்லாதது ஒன்றை, அறிவுக்கும் ...ாயத்துக்கும் எட்டாத ஒன்றை ஆகாயவாணி எனக் கூறுவது எவ்வளவு பேதமை! கர்ணன் பரசுராமனிடம் வில்வித்தை கற்க வேண்டினான் பரசுராமன் நீ பிராமணனாவென்று கேட்கிறார். கர்ணன் ஆமென்றறைந்தான். கர்ணனுக்குத் தன்னுடைய வரலாறு தெரியாது. அவன் க்ஷத்திரியனெனத் தன்னைத் தெரிந்துபிராமணன் எனக் கூறினால் குற்றமேயன்றி மற்றபடி குற்றமன்று. கர்ணனுடைய தொடைச்சந்தில் இரத்தவாரி என்கிற புழு நுழைந்து துளைத்து இரத்தம் பாயும்படி செய்தபோதுங் கூட கர்ணன் தனது குருவுக்கு நித்திரை பங்கம் செய்யக்கூடாதென்று அசையாமலிருந்தானென்றால், கர்ணன் எவ்வளவு உத்தமனாயும் குருவுக்காகத் தனது உயிரையே அர்ப்பணம் செய்யக்கூடியமன நிலை உடையவனாயுமிருந்திருப்பானென்று வாசகர்களே அறிந்து கொள்ளுங்கள். பரசுராமர் கர்ணனை யாரென்று வினவினார். கர்ணன் மௌனமாயிருக்கிறான். கர்ணன் தனது வரலாறு தெரியாமல் மௌனமாயிருந்தானேயன்றி மற்றபடி உண்மையை மறைக்க மௌனமாயிருக்கவில்லை. இரத்தத்துக்குப் பயப்படாமலிருந்த படியால் கர்ணனை க்ஷத்திரியனெனப் பரசுராமர் தீர்மானிக்கிறார். பார்ப்பனர்கள் வேள்வி, யாகம் முதலியவைகள் செய்கையில் எவ்வளவு தைரியமாய் உயிர்க்கொலை செய்கிறார்கள்.

கொலை செய்ய அஞ்சாத எத்தனை பார்ப்பனர்களோ இருக்கிறார்களே! தனது குருவின் நித்திரைக்கு இடையூறு வராமலிருக்கவேண்டுமென்று நினைத்த உத்தமோத்தமனாகிய கர்ணனை பரசுராமர் சபிக்கிறார். இத்தனை அறிவில்லாதவன் கற்றதனாலென்ன பயன்? பீஷ்மர் முனிலையில் க்ஷத்திரியனுக்கு வில்வித்தை கற்பிப்பதில்லை என்று சபதஞ் செய்தது பங்கமாய்விட்டதே! இதற்கு பரசுராமர் என்ன பரிகாரம் செய்து கொண்டார்? மானமிழந்து வாழ்வதைவிட உயிரைவிடுவது நலந்தன்றோ? பரசுராமர் "நான் பீஷ்மன் முனனிலையில் க்ஷத்திரியனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுப்பதில்லை என்ற சபதத்தை நீ கெடுத்தபடியால் என்னிடத்தில் நீ கற்றவில் வித்தை நல்ல சமர் முகத்தில் உதவாமற் போகக்கடவது" என்று சபித்தார். பரசுராமர் சூரிய வமிசத்தையே கருவறுத்த சண்டாளனென்ன முன்னமே கண்டோம். கர்ணன் பாரத யுத்தத்தில் தோல்வியுற்றதற்கு இது ஒரு காரணமாகும். இன்னும் பல வஞ்சகச் செயல்களினாலேயே கர்ணன் பாரத யுத்தத்தில் தோல்வியுறுகிறான். அவைகளை வருமிடங்களில் விளக்குவோம். அன்றி கர்ணனைப்போல் வலிமையுடையவர்களில்லை யென்றே சொல்லலாம். பல வஞ்சகச் செயல்களினால் ஏமாற்றாமல் சண்டை செய்தால் கர்ணனே வெற்றிபெறுவானென்பது திண்ணம். இதற்குப் பலசான்றுகளுமுள.

———)o(———